உமர்கயாம்

வாழ்வும் இலக்கியமும்



தே. கோவேந்தன்

உமர் கயாம்
வாழ்வும் இலக்கியமும்

ஆங்கில ஆக்கம்

பீடர் அவரி & சான் ஈத் இசுடெப்

தமிழாக்கம்

த. கோவேந்தன்

நூல் விளக்கம்

நூற் பெயர்	:	**உமர் கயாம்** **வாழ்வும் இலக்கியமும்**
ஆசிரியர்	:	*ஆங்கில ஆக்கம்* **பீடர் அவரிட்** **சான் ஈத் இச்டெப்**
உரிமை	:	**த. கோவேந்தன்**
பொருள்	:	வாழ்வியல் கவிதைகள்
அளவு	:	1 X 8 கிரௌன்
பக்கம்	:	106
தாள்	:	10.7
எழுத்து	:	12 புள்ளி - 14 புள்ளி
கட்டமைப்பு	:	வல்லட்டை
ஒளியச்சு	:	**சகுராம் கிராபிக்ஸ்**
மறுதோன்றி	:	**மணி ஆப்செட்**
விலை	:	**உரூபா 25/-**

வாழ்வும் இலக்கியமும்

வாழ்வேதான் இலக்கியம், இலக்கியமேதான் வாழ்வு. மாந்தனின் மூன்று படைப்புகள் அவனை உயர்த்தின. ஒன்று கலந்துறவாடும் மொழி; இரண்டு தீ; மூன்றாவது உருளை; (சகடம்). இம் மூன்றும் இன்றேல் மாந்த சமுதாயம் விலங்காண்டி நிலையிலேயே உயிரினங்களில் ஒன்றாய் இருந்திருக்கும். மாந்தன் சிந்திக்கின்ற உயிருருவாய் விழிப்புற்ற போதுதான் பட்டறிவு படைப்பறிவாய்ப் பல்லாயிரம் எல்லைகளில் விரிவுற்றது. வாய்மொழியான தாய்மொழி படிப்பறிவைத் தோற்றுவித்து இலக்கியப் படைப்பினை பன்னூறு மொழிகளில் வாழ்வை எதிரொலித்தது. கனவைக் கற்பித்தது. உழைப்பு மேலும் மேலும் உள்ளொலியையும் உள்ளொளியையும் உணர்வில் ஊறி உணர்ச்சியாய் வெளிப்பட்டது.

ஆறாவதறிவின் பேராளனாக மாந்தன் மாறியதும், நிலைத்திணையினும் இயங்கு திணையினும் உயர்ந்து விட்டான் மாந்தன் எனவே தான்

"மாவும் மாக்களும் ஐயறிவினவே
மக்கள் தாமே ஆறறிவு உயிரே"

என்றான் தொல்காப்பியன். பிற்கால அவ்வையாரும் "அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்றார். இதன் விளக்க உரையாக உலக நாடகக் கலைஞன் சேக்குவியர் "ஆ! மாந்தன் எத்தகைய திறனமைந்த படைப்பு! எத்தனை அறிவாற்றல்! எத்தனை எல்லை இலாக் கலைப்பண்பு! உருவில் இயக்கத்தில் செயலில் எத்தகை நுண் பேரறிவு! உணர்வில் ஓர் இறையுரு ஒப்பான்! உலகின் வனப்பெலாம் திரண்ட வடிவம்! உயிரினங்களின் ஒப்பற்ற கொடுமுடி!" என்றான்.

தன்னைப் பற்றி உலகின் கற்பனைக் கருத்துருவத்தை உருவாக்குகிற, உண்மையில் வாழ்வு எப்படி இருக்கிறது எப்படி இருக்க வேண்டும் என இரு வழிகளிலும் உலகைக் காண்கிற திறமை மாந்தனுக்கு மட்டுமே உண்டு. எனவே புதிது புதிதாய்ப் புத்தம் புதிதாய்க் கலை, அறிவியல் இரண்டு துறை களிலும் திரண்டு ஓங்குகிறான்.

மாந்தன் கால ஓட்டத்தில் சூழ்நிலைகளைச் சார்ந்திருக் கின்றான்; சூழ்நிலைகள் மாந்தனால் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு நூற்றாண்டுதோறும் புதிய புதிய போராட்டங்களை மாந்தன் சந்திக்கிறான். அதில் வெற்றியும் பெறுகிறான். இருட்டை ஒளி அகற்றி விடுவது போல அச்சத்தை - அடிமைத் தளையை, அன்புணர்வும் ஆக்க உணர்ச்சியும் அகற்றிவிடுகின்றன. தங்கு தடையற்று இருத்தலையே வழியாகக் கொண்டது வாழ்க்கை. அதாவது முயற்சியற்ற முயற்சியின் உள்ளுணர்வின் வெற்றிப்பாதை; அதுவே கலை இலக்கிய வெளிப்பாடு.

எவ்வளவு அழகானது இந்த உலகம்! எத்தனை கோடி இன்பம்! "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று முழு இயற்கையின் விளையாட்டிலும் பங்கேற்பதே நமது வாழ்க்கை. அன்புறவோடும், நன்றியுணர்வோடும் அறவுணர்வோடும் நாம் ஆடிப் பாடுவதே வாழ்க்கைக் கலை. மகிழ்ச்சியின் கூத்தும் சிரிப்பும் மாந்தனுக்கன்றோ கிட்டியுள்ளது. இவற்றின் எதிரோலியே இலக்கியக்கலை.

ஒவ்வொரு மாந்தனும் இந்த உலகத்திற்கு ஒரு குறிப்பிட்ட செயலுக்காகவே (உடலுழைப்பு - அறிவுழைப்பு) வருகிறான். அவன் நிறைவேற்ற வேண்டியது ஏதோ ஒன்று உள்ளது. உடல் - மன உழைப்பால் கொடுக்க வேண்டிய பணி ஏதோ உள்ளது. நாம் நேர்ச்சியால் வரவில்லை. ஆண் பெண் அன்புறவால் ஒரு பொருளுடன் பிறந்திருக்கிறோம். நம் பின்னால் ஒரு நல்ல உயர் நோக்கும் இருக்கிறது. வாழ்க்கை அறவியலில் முழுமை நம் மூளை ஏதோ செய்யக் கருதுகிறது. அதில் ஒன்றுதான் பாட்டிலக்கியம்.

பன்னெடும் காலமாகப் பாட்டிலக்கியப் பாவலன், பல நாடுகளில் பலமொழிகளில் கார்க்கானாறாகவும், கருத்தருவி யாகவும் ஆர்வமும் எழுச்சியும் அக்கறையும் அன்பும் கொண்ட ஆறாகவும், இன்னிளவேனிலின் பன்மலர் மணத் தென்றலாகவும், தீப்பறக்கிற சூறாவளியாகவும் விளங்கு கின்றான். மாந்தன் அனைத்தையும் செய்ய முடியும் என்ற துணிவினால்தான். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' - என்று நாட்டுப் பற்றும் நவில் இனப் பற்றும் கொண்டுயர்ந்தான். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே" என்றான். சிந்தனைக்கு உணவளித்து அளித்து

'எது வாழ்க்கை?' என்ற வினாவை ஒவ்வொரு புதிய சமூகச் சூழலிலும் புதிய மாந்த வரலாற்றைப் படைப்பதே வாழ்க்கை என்றுணர்ந்தான்.

வாழ்வுணர்வில் வெளிப்பட்ட ஒன்றே பாட்டிலக்கியம். அதன் இலக்கணத்தை கீட்சு என்னும் ஆங்கிலப் பாவலன் "பாட்டின் தலையாய நோக்கம் கவலைகளை ஆற்றவும் உள்ளத்தை உயர்த்தவும் கூடிய தோழனாக இருப்பதே" என்றான். மாந்த உள்ளத்தில் உணர்ச்சி மிகும்போது பாடல் பிறந்தாலும், பாட்டில் வெளிப்படையாகத் தோன்றும் பொருளைவிட வேறு பொருளும் உண்டு. நம் சங்ககால அகப்பொருள் பாடல்கள் அவ் வகையைச் சார்ந்தவை பண்டை, சீன, யப்பான் பாடல்களுக்கும் இப் பண்பு - உலகில் பலமொழிப் பாடல்கள் வாழ்வியலின் நுண்மையை நோக்கிச் சொல்பவையே. அம் மொழிகளில் ஒன்று பாரசீகம்.

நானிலத்தில் படைப்புயிர் பலவும் ஆண் பெண்ணாக வாழ்கின்றன. அன்புற்றிணைந்து இன்பப்பெருக்கம் செய் கின்றன. உயிரினங்களில் உயர்ந்த சிறந்த மாந்த இனமும் இதில் விதிவிலக்கில்லை. மற்ற உயிர்களுக்கும் தாம்தாம் இணைய ஒரு பருவம் உண்டு. அவை இயல்புணர்ச்சியால் வாழ்வன. மாந்த இனமோ உந்துணர்ச்சியை ஒரு பக்குவப் பட்ட பருவத்திலிருந்து உள்ளுயிர்ப்பின் அகத் தூண்டுதலால் கிளர்ச்சி கொண்டெழுவது. எனவேதான் மாந்தனின் ஆண்பெண் அன்புறவு காதலாக மலர்கிறது, காவியமாகக் கனிகிறது, புணர்ச்சியில் நிறைவும் முழுமையும் புத்துயிர் பெறுகிறது.

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"

என்றான் தொல்காப்பியன். இன்பம் பொதுப் பண்பாயினும் அவ் இன்பத்தை எடுத்துரைக்கத் தெரிந்தவன் மாந்தன் ஒருவனே. ஒன்றும் உறவு ஒன்றா உறவு என்று ஓர் ஒழுங்கு முறையை ஏற்படுத்திக் கொண்டபிறகு - எல்லையை வகுத்துக் கொண்டபிறகு ஒன்றிய உறவுக்கு நட்பென்றும் காதல் என்றும் தோழமை என்றும் பெயரிட்டனன். எனவேதான் 'மாதர் காதல்' - ஆயிற்று. காமத்திற் சிறந்தது. காதற் காமம் ஆயிற்று. 'மலரினும் மெல்லியது காமம், சிலர் அதன் செவ்வி தலைப்படுவர்" என்றான் வள்ளுவன். மேலும் "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள" என்றறிந்து "அறிதொறும் அறியாமை கண்டற்றால், காமம் செறிதொறும் சேயிழை மாட்டு" என்றுணர்ந்தவன் சிற்றின்பமா இல்லை இல்லை பேரின்பம் கண்டான். 'உடம்பொடு உயிரிடை என்னமற்றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு" எனப் பிரிவறியாது வாழத் தலைப்பட்டான். காதலியே வாழ்க்கைத் துணையானாள். வாழ்வின்பம் நுகர்ந்தான் - மயக்குறு மக்களை ஈன்றான். ஏறுபோல் பீடு நடை நடந்தான். இவற்றுக்கெல்லாம் காரணம் 'அன்பின் வழியது உயிர் நிலை' என உணர்ந்து உலக வாழ்வில் உயர்ந்தான் சிறந்தான். அவனே பாவலனானபோது

"செம்புலப் பெயல் நீர்போல - அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" என்று களித்தான்.

ஏழை எளிய மக்கள் மட்டுமன்று, கள்ளுக்கு இல்லாத களிப்பூட்டும் எழுச்சியும் இன்பமும் பெண் அன்பில் உள்ளன

என்றறிந்திருந்தாலும் இன்ப எழுச்சிக்கு மாமன்னர்கள் கள்ளுண்டனர்.

'பொற்பு விளங்கு புகழ்அவை நிற் புகழ்ந்து ஏத்த
இலங்கு இழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மணம்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்து இனிது உறைமதி பெரும,
வரைந்து நீ பெற்ற நல் ஊழியையே'

என்பான் மாங்குடிமருதன்.

"சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே யாம்பாடத்
தான்மகிழ்ந்துண்ணும் மன்னே''

என்று அவ்வையும் அதியமானுடன் குடித்துப் பாடியுள்ளாள்.

சங்க இலக்கியத்தில் கள், நறவு, தேறல் எனப்பல பெயரில் மக்கள் மது அருந்திய செய்தி வருகின்றது. ஆனால் அளவறிந்துண்டுள்ளனர். எவரும் தள்ளாடியதாகவோ மக்களால் மதிக்கப்படாதவராகவோ எங்கும் காணப்பட வில்லை.

வந்தேறிகளான ஆரிய மக்கள் வந்த பின்னர்தான் மட்டு மீறிய மது மாந்தனை இழிநிலைக்குத் தள்ளி அழிக்கலாயிற்று. அவர்கள் கொண்டு வந்த 'சோமபானம்' 'சுரபானம்' இரண்டும் மக்கள் முதல் மன்னர்வரை மாள்வித்தன. பரத்தமை யும் அவர்களின் வாழ்வுறவே. அதனால்தான் வள்ளுவன் கூட பேரின்ப மயக்கம் கள்ளுக்கில்லை, கன்னியர்க்குண்டு என்று கூறிவிட்டுப் பின்னர் கள்ளுண்ணாமையையும் விலை மகளிரான பார்ப்பனப் பரத்தைகளையும் சாடுகிறார்.

'அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சாகும்' என்பது பழமொழி. இப் பழமொழி மாந்த வாழ்வில் எதிலும் எதற்கும் பொருந்தும்.

தமிழகத்தில் பாரதி, பாரதிதாசன் இருவரும் மது அருந்துபவர்கள்தாம். ஆனால் சான்றோர்களால் எண்ணப் படாதவராக இல்லாமல் உயர்ந்திருந்தனர். மேலை நாட்டில் பேக்கன் முதல் பெர்ட்ராண்ட் ரசல் வரை மதுப்பழக்கம் இருந்தாலும் மட்டு மீறியவர்கள் அல்லர். மாறுபாடில்லாத உண்டியோடு ஊறு பாடற்று வாழ்ந்தனர்.

கள்ளினை மதுவினை - பல இடங்களிலும் உயர்த்தப் பாடியுள்ளான் பாரதி. காரணம் அளவோடருந்திய கள் கருத்தூற்றைப் பாட்டருவியாய் வெளிப்பட உந்தாற்றலாயிற்று.

உச்சிதனை முகர்ந்தால் -
உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி.

* * *

புல்லாங்குழல் கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்பி நற்கீதம் படிப்பான்
கள்ளால் மயங்குவது போலே - அதைக்
கண்மூடி வாய்திறந்தே கேட்டிருப்போம் - என்றும்

* * *

தேர்ந்தே கனிகள் கொண்டுவருவேன் நல்ல
தேங்கள் கொண்டினிது களிப்போம் - என்றும்

* * *

பானமடி நீ எனக்கு, பாண்டமடி நானுனக்கு -

* * *

ஆசை மதுவே! கனியே அள்ளுசுவையே -

என்று ஓங்கி வரும் உவகையில் காதற்பாடல் களிபாடுவ தோடன்றி பத்தி வெள்ளத்திலே மூழ்கிய போதும்,

"சக்திப் புகழாம் அதை அள்ளு - மது
தன்னில் இனிப்பு ஆடும் அந்தக் கள்ளு"

என்றும்

'மது' - என்ற பாடலில் போகியும் போகியும் பாடும் ஆறு பாடலிலும் உண்மையையும் உருவகத்தையும் பாடுகிறார்.

"பச்சை முந்திரித் தேம்பழங் கொன்று
பாட்டுப் பாடிநற் சாறு பிழிந்தே
இச்சை தீர மதுவடித்து உண்போம்
இஃது தீதுஎன்று இடையர்கள் சொல்லும்
கொச்சை பேச்சிற் கை கொட்டி நகைப்போம்
கொஞ்சு மாதரும் கூட்டுணும் கள்ளும்
இச்சகத்தினில் இன்பங்கள் அன்றோ?
இவற்றின் நல்லின்பம் வேறு ஒன்றும் உண்டோ?

"மாதரோடு மயங்கிக் களித்தும்
மதுர நல்லிசை பாடிக் குதித்தும்
காதல் செய்தும் பெறும்பல இன்பம்
கள்ளில் இன்பம், கலைகளில் இன்பம்,
பூதலத்தினை ஆள்வதில் இன்பம்,
பொய்மை அல்ல இவ் இன்பங்கள் எல்லாம்
யாதும் சக்தி இயல்பெனக் கண்டோம்,
இனைய துய்ப்பம் இதயம் மகிழ்ந்தே!'

- என்று பாடி இறுதியாக,

"மது நமக்கு மதுநமக்கு
மதுநமக்கு விண்ணெலாம்
மதுரமிக்க அரிநமக்கு
மதுவெனக் கதித்தலால்
மது நமக்கு மதியுநாளும்
மது நமக்கு வானமீன்
மது நமக்கு மண்ணு நீரும்
மது நமக்கு மலையெலாம்
மது நமக்கோர் தோல்வி வெற்றி
மது நமக்கு வினையெலாம்
மது நமக்கு மாதர் இன்பம்
மது நமக்கு மதுவகை,
மது நமக்கு மது நமக்கு
மது மனத் தொடாவியும்
மதுரமிக்க சிவநமக்கு
மதுவெனக் களித்ததால்"

- இப்படிப் பாடிச் செல்கின்றார் பாரதியார். விரிக்கின் பெருகும். சுருக்கின் எஞ்சும். மு. கருணாநிதியால் எப்படி தமிழகத்தில் மதுக்குடிப் பழக்கம் பெருகித் தமிழர்களைச் சாகடிக்கின்றதோ அதைப்போல மட்டுமீறிய குடிப்பழக்கத்தைத் தங்கட்கு அடிமையாய் இருப்பதற்கு ஆரியர்கள் சோமபானம் என்றும் சுராபானம் என்றும் நல்லவர்களை - வல்லவர்களைத் திசை திருப்பி விட்டார்கள். தேன் அளவோடு உண்டால் எப்படி நன்மை பயக்குமோ அப்படியே மதுவும் (கள் - நறவு) நன்மை பயப்பதே.

வாழ்க்கை மீது காதல்

அறிஞர் ம.இலெ. தங்கப்பா கூறுவதுபோல:

"நாம் வயப்பட்டிருக்கும்போது நம்முள்ளிருக்கும் நல்லவை யெல்லாம் வெளிப்படுகின்றன அல்லவா? அதுபோலவே வாழ்க்கைமீது காதல் வயப்படுவோமானால் எப்பொழுதும் நாம் நல்லவர்களாகவே இருப்போம்"

"வாழ்க்கை மீது காதலோடு வாழுங்கள்; அது ஒன்றே வாழ்தல்"

"உறவில் மட்டுமே வாழ்க்கை பொருளுடையதாகின்றது"

"அறிவாராய்ச்சியாளனாக இராதே; கருத்தளவில் வாழாதே; எளிமையும் அன்பும் உடையவனாக இரு; சுவர்களை இடித்தெறி; தற்காப்பைத் தகர்த்து அன்பு வெள்ளத்துள் சாய்ந்து விடு; முழுமையான நல்லியல்பில் உன்னை இழந்துவிடு"

இவ்வாறு வாழ்வதுதான் வாழ்க்கை. மக்களுக்கும் பொருள்களுக்கும் அடிமையாய் இருந்தால் - சார்ந்திருந்தால் அதனை விட்டுவிடுவதே உண்மையின் பேரின்பம். இவ்வாறிருந்தால் அன்புறவு நமக்கு மிகப்பெரிய உரிமையை - விட்டு விடுதலையாகி நிற்கும் பேருரிமையைத் தருகிறது.

தோழமை என்பது கிளர்ச்சி செய்வது; ஆகவே அன்புவாணன் என்பவன் கிளர்ச்சிக்காரன். அவன் எல்லாப் பழமைகளுக்கும் எதிரி. ஓட்டை ஒடிச்சலான - இயற்கைக்கு முரணான் மரபிற்கும் எதிரி. எல்லா இயக்கக் கோட்பாடு களுக்கும் எதிரி. அவன் விரும்புவன அன்பு - உண்மை -

ஒழுங்கு என்பவையே. இவற்றைக் கண்டுகொண்டவர்கள்தாம் சங்கச் சான்றோர்கள். அவர்களோடு ஒப்பு நோக்கினால் உமர்கயாமைப் புரிந்து கொள்ளலாம்.

தான் என்பதும் நான் என்பதும் இல்லாமல் வாழ்வதே இன்பம், பொலிவு. அதுவே காதல், அதுவே இசை, அதுவே மது. தன் முனைப்பு இல்லாமல் வாழ்வது அதுவே மெய்யான வாழ்வு. இந்த வாழ்வையே நாம் 'பாட்டு வாழ்க்கை' என்கிறோம்; இயற்கையோடு கைகோர்த்து கலந்தின்புறும் வாழ்க்கை இது.

அன்பை விட்டுவிட்டு உடன்பாடு செய்து கொண்டு வாழ்வது, வாழ்வதைவிட இழிவானது. உண்மையான வாழ்வை வாழ்வது ஒருகண நேரமேயானாலும் கூட பொய்யில் நிலைத்து வாழ்வதை விட மிக மிக மேன்மையானது. பொய்யில் வாழ்வதைவிட மெய்மைக்காக இழப்பது மிகவும் மதிப்பும் சிறப்பும் மிக்கது.

வாழ்வின்பம் உழைப்பில் செழிப்பது; அன்புறவில் கொழிப்பது; ஈவதில் இறும்பூது எய்துவது, அது அழகியல் ஆழியில் ஆழ்ந்து திளைப்பது. அப்படிக் கலை இலக்கிய அழகியல் நுகர்வாக மாற்றப் பெரிதும் ஒன்றும் தேவையில்லை; வெறும் அழகான உணர்வு நிலையே தேவை, ஒரு நுண்ணுணர்வுள்ள உள்ளுயிர். அதிக உணர்வு கொண்டால், அதிக உள்ளொளி கொண்டவராவோம். 'யாதும் ஊரே யாவரும் கேளிரென வாழ்வோம்'

ஆண் பெண் ஒருமையில் இருக்கும் துணிவை அன்பின் நுண்ணறிவு தருகின்றது. மேலும் படைப்புத் தன்மையையும்

நுண்ணறிவு தருகின்றது. படைப்பதற்கும் உடைப்பதற்கும் புத்துலக வாழ்வைக் கொணர்வதற்கும் பசியும் மிகப் பெரிய தவிப்பும் எழுகின்றன. அவற்றுக்குப் பின்னர்தான் அவற்றின் தொடர்ச்சியாக நாம் மகிழ்ச்சியாக முடிகிறது; நாம் பேரின்பம் துய்க்க முடிகிறது. அதன் தொடக்க உணர்வின் வெளிப்பாடே பாரசிகப் பாவலன் உமர்கயாமின் வானமிழ்தம்.

உமர்கயாமின் காலம் 1941 - ஆம் ஆண்டு அளவில் தெளிவாகத் துணிவாகத் தெரிவிக்க முடியாமல் இருந்தது. இந்தியப் பேரறிஞர் சுவாமி கோவிந்த தீர்த்தா அவர்களும், சோவியத்து அறிவியல் ஆய்வுக் களத்தினரும் என் நூற்கு மூல முதலாக பாரசிக இலக்கியத்தின் ஏடு தேடுபவர்களுமான பீடர் அவுரி, சான் ஈத் இசடெப்பும் (Peter Avery & John Health Stubbs) ஆகியோரின் அரிய முயற்சியின் தேடலுக்குப் பிறகு உமர்கயாம் 18மே - 1048 - பிறப்பு என்றும், இறப்பு 1131 - என்று உறுதி செய்யப்பட்டது.

இவர் வரலாறு பற்றி தமிழில் முன்னர் வந்த இரு கட்டுரைகளைக் காணுங்கள்.

காதலின் வளர்ப்புப் பண்ணை

"பாரஸிக தேசம் மதுவிற்கும் மதுரமான பாடல்களுக்கும் புகழ்பெற்றது; காதலின் வளர்ப்புப் பண்ணை. உமர்கய்யாம் என்ற நறுங்கனி முதிர்ந்து பழுத்தது இங்கேதான். இத் தேசத்தின் பண்டைப் புகழெல்லாம் இப்பொழுது மாய்ந்து விட்டது. ஆனால், இங்கிருந்த 'ரோஜா' உத்தியானங்களின் நறுமணத்தை இன்றும் உலகம் நுகர்ந்து இன்புறுகிறது. இன்றும் இங்கே விளைந்த காதல் மதுவை மனோபாவனையால் உலகம்

பருகுகிறது. நமது அறியாமையைத் தெளிவித்து, பயங்கரமான உண்மைகளால் நம்மை அச்சுறுத்துகின்ற தற்கால உலகத்தே, இளைஞர்க்குரியதாய் இனிய நறுமணம் கமழ்வதாய் உள்ள நூற்பிரதி ஒருபொழுதும் முடிவுடையாதபடி நீண்டு விரிந்து கொண்டே செல்லும் இடம் ஏதேனும் உண்டென்று கனவு காணக்கூடுமானால். அந்த இடம் பாரஸிக தேசம் தான்.

"இத்தேசம், அழகு நிரம்பிய ஒரு பெண்ணணங்கின் சரீரம் கேவலம் நோயினால் சாயை மாத்திரமாய்த் தேய்ந்து விடுதல் போலச் சீர்கேடுற்றுவிட்டது. இதனைத் தற்காலத்து மக்கள் அனைவரும் நினைந்து நினைந்து அற்புதக் காதல் - சிந்தனையில் மூழ்கிக் கனவு காணுதற்குரிய ஓர் இடமாக அமைத்துவிட வல்லதாகும் இதன் இலக்கியம். இலக்கியம் ஒருவகை ரஸவாதம் என்பது உண்மையல்லவா? இனிமேல் என்றாவது பாரஸிக தேசம் மக்களுக்குக் கவிதையும் கதையு மாகிய புதிய மதுவை வார்த்துத் தரவல்லதா? இக் கேள்வி வேண்டாதது. வெகு காலத்திற்கு முன்னரே மதுக்கிண்ணம் ஒன்றை இத் தேசம் அளித்துள்ளது. இக் கிண்ணத்தில் உணர்ச்சி சுரந்து ததும்பிக் கொண்டிருக்கிறது. பாரஸிகம் உலகத்தில் அமைந்ததன் பயன் நிரம்பியாய் விட்டது.

"ஆனால், முற்காலத்தே உமாரின் புகழ்ச்சிக்குரியவர் களாய் விளங்கிய இப் பாரஸிக மக்கள் எப்பொழுதும் இன்பத்தை நாடி உணர்ச்சிச் சூழலிலே மூழ்கியிருந்தவர்கள் அல்லர். இப்பொழுது ஆப்கானிஸ்தானம் என்று வழங்குகிற தேசம் பண்டைக் காலத்தில் பாக்டிரியா என்று அழைக்கப் பட்டது. உயர்ந்த மலைகள் செறிந்தது இந்தப் பிரதேசம். உழைத்து வாழ்தற் பொருட்டு இங்கிருந்து கீழே இறங்கிப்

பரவிவந்தனர் இம் மக்கள். ஆரிய மக்களைப்போன்றே இவர்களும் திடசித்த முடையவர் பாரஸிகர்களுக்கு அவர் களுடைய தேசத்தின் பெருமையைக் காட்டுகிறது என்ற அளவில் அது சீரியதாய் அமைந்த ஒரு சரித்திரமேயாகும். அப் பேரிதிகாசத்திலேயுள்ள அறிவுரைகளும், நீதிமொழி களும், மக்களது நீண்டகால அனுபவங்களைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன. உண்மையான சரித்திரமாயிருந்தாலும், அல்லது விநோதமான புனைகதையாயிருந்தாலும், அந் நூல் ஒரு பேரிலக்கியம் என்பதில் ஐயமே இல்லை.

"இப் பேரிலக்கியத்தின் ஒரு பகுதிதான் ஸோரப் - ருஸ்தம். இதில் வரும் சரித்திரத்தைப் பலரும் அறிந்தி ருக்கலாம். இதனை மாத்யூ ஆர்நால்ட் என்ற பேராசிரியர் கவிதை வடிவில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மேனாட்டினரிடையே பிரசித்தப்படுத்தியுள்ளார். ஷாநாமா வின் பெருமை இவ்வாறு மேனாட்டிலும் அறியப்படுவ தாயிற்று.

உமார்கய்யாம்

"இங்ஙனமே வேறொரு பாரஸிகப் பாடலும் மொழி பெயர்ப்பு மூலமாக உலகப் பிரசித்தி அடைந்துவிட்டது. அது உமார்கய்யாம் என்ற கவிஞர் இயற்றிய ருபாயத் என்ற கவிதை நூலேயாகும்.

"இக் கவிஞரின் பெரும் புகழ் நமது தமிழ்நாட்டிலும் பரவி வருகிறது. இவரது பாரஸிகப் பாடலைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மொழிபெயர்த்தது நமது பாக்கியம் என்றே கூறவேண்டும். தமிழ்நாட்டில் அவர் பெயர் என்றும் மங்காது

ஒளிவிட்டுத் திகழும்படி செய்து விட்டார் நமது கவிமணி. ஆங்கில உலகில் ப்விட்ஜிரால்ட் என்ன மதிப்பைப் பெற்றுள்ளாரோ அம் மதிப்பு நம் கவிமணி அவர்களுக்கும் உரியது. இவர் மூலமாய் நமது நாட்டில் உமார்கய்யாம் ஓர் அற்புதமான மறுபிறவியை எடுத்துள்ளார்.

"இரான் தேசத்துக் கவிஞர்களுள் உமார் ஒரு சிறந்த கவிஞர் என்று கூடச் சொல்ல முடியாது. தம் காலத்தே இவர் பீஜ கணிதத்தில் ஒரு சிறந்த மேதாவியாகவும், ஜோதிஷத்தில் ஒரு நிபுணராகவும் புகழ் பெற்றிருந்தார். இவர் அரபி மொழியில் இயற்றிய பீஜகணிதம், மிகப் பலவாய்ப் பிரதிகள் செய்யப்பட்டு, பலராலும் கற்கப்பட்டு வந்தது. இவர் இயற்றியுள்ள முகம்மதியப் பஞ்சாங்கம் கணிதத்தில் இவருக்கிருந்த பெருந்திறமையைக் காட்டவல்லதென்பர். இவரது ஆழ்ந்த கல்வியறிவு முதலியவற்றையெல்லாம் தற்கால மக்கள் மறந்துவிட்டார்கள். மறவாது போற்றுவது எவற்றை என்றால், வாழ்க்கையைக் குறித்தும், அது பயனின்றி வறிதாயுள்ள தன்மையைக் குறித்தும் இவர் சிந்தித்து எழுதியுள்ள வற்றைத்தான். இவற்றிலே, லட்சக்கணக்கான மக்களுடைய உள்ளத்தில் தோன்றும் சந்தாப உணர்ச்சி பிரதிபலிக்கிறது.

"இக் கவிஞரது உண்மைப் பெயர் கியாதுடின் அபுல்பாத் உமார். கி.பி. 11 – ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிஷாபூர் என்ற நகரத்தில் இவர் பிறந்தனர். இவர் தமது பெயரோடு கய்யாம் என்பதையும் தாமே சேர்த்துக் கொண்டார். கய்யாம் என்பதற்குக் கூடாரம் செய்பவன் என்று பொருள். இத் தொழில் இவரது தந்தைக்கு இருந்ததுபோலும். இவர் பள்ளிக் கூடத்தில் வாசித்துக் கொண்டிருக்கும்போது, இவரது பள்ளித்

தோழர்களாய் இருவர் இருந்தனர். இவர்கள் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். தம்முள் யாரேனும் ஒருவர் உன்னத பதவியை அடைந்து செல்வர்களாய் விடுவார்களானால், அவர் மற்றை இருவருக்கும் உதவி செய்து, அவர்களைப் பதவியில் உயர்த்த வேண்டும் என்பதுதான் அந்த ஒப்பந்தம். வியக்கத்தக்க முறையில் ஒப்பந்தம் நிறைவேறியது. ஒருவர் ஒரு மாகாணத்தை ஆளும் பதவியைப் பெற்றனர். உடனே இவர் அரண்மனை ஸர்வாதிகாரப் பதவியைத் தம் தோழர்களுள் ஒருவருக்குக் கொடுத்தார். உமாருக்கு அவரது கணிதப் பயிற்சி இடையீடின்றி நடைபெறவேண்டும் என்று கருதி, ஆண்டுதோறும் ஒருபெருந் தொகையைக் கொடுத்துக் கவலையின்றி வாழச் செய்தனர்.

ருபாயத்

"இவ்வாறாகப் பணக் கவலை யாதொன்றும் இல்லாதபடி உமார்கய்யாம் தம்முடைய நீண்ட ஆயுளை, கணிதம் முதலிய சாஸ்திரப் பயிற்சியில் செலவிட்டு வந்தனர். இடையிடையே மக்களுடைய இம்மை, மறுமை முதலிய பொருள்கள் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து அற்புதமான செய்யுட்கள் பல இயற்றினர். இச் செய்யுட்களுக்கு 'ருபாயத்' என்று பெயர். ருபாயத் என்றால் நான்கடிச்செய்யுள் என்று பொருள். தமிழிலுள்ள நாலடியார் என்ற நூற்பெயரை இதனோடு ஒப்பிடலாம்.

பாடல்களின் அடிநாதம்

"இவர் சிந்தித்துக் கண்ட முடிவு இன்ப உணர்ச்சியை விளைக்கத் தக்கதன்று. இவர் பாடல்களிலே வாழ்வு

முடிந்ததன்பின் மறுமையைக் குறித்து யாதும் உறுதியாகக் கூறமுடியாது என்ற கொள்கை தொனித்துக் கொண்டே இருக்கிறது. இவ்வுலகத்தில் உண்பதும், குடிப்பதும், சுகித்து வாழ்வதும் தான் கைகண்ட பலனோ என்று இவர் ஐயுறவு கொண்டனர். ஒரு சோக உணர்ச்சிதான் இவரது பாடல்களின் அடிநாதமாய் அமைந்துள்ளது." எஸ். வையாபுரிப் பிள்ளை.

* * *

'பாரசீக நாட்டில் நைஸாப்பூர் என்ற ஊரில் இமாம் மொவாபிக் என்ற ஒரு பெரியார் இருந்தார். அவர் ஜனங்களுடைய நன்மதிப்பையும் மரியாதையும் வெகுவாகப் பெற்றவர். அவரிடம் குரானும் மதநூல்களும் பயிலும் எந்தப் பையனும் முன்னுக்கு வந்து சுகமாக வாழ்வான் என்பதில் மக்களுக்கு அசையா நம்பிக்கை இருந்து வந்தது.

"மூன்று மாணவர்கள் இமாமிடம் ஒன்றாகப் பயின் றார்கள். மூவரும் புத்திசாலிகள்; இயற்கையில் உயர்குணங்கள் அமையப் பெற்றவர்கள். ஒரு நாள் அவர்களில் ஒருவன் மற்ற இருவர்களிடம், "இமாமிடம் படிக்கும் எந்த மாணவனும் அதிர்ஷ்டசாலிகளாகாவிட்டாலும், நம்மில் எவனாது ஒருவன் நல்ல நிலைக்கு வருவதுபற்றிச் சந்தேகமேயில்லை. ஆகவே நம்மில் எவன், உயர் பதவியை அடைந்தாலும், அவன் மற்ற இருவர்களுக்கும் தன் அதிர்ஷ்டத்தையும் சுகத்தையும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்" என்றான். மூவரும் இதற்கு ஒப்புக்கொண்டு தமக்குள் அவ்வாறே ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

"பின்பு வருஷங்கள் பல ஓடின. அம் மூவரில் ஒருவனாகிய நிஜாம் உல்க் - முலக் என்பவன், தன் நாட்டிலிருந்து வெளியேறி, கஜினியிலும், காபூலிலும் பிராயணம் செய்தான். அங்கிருந்து திரும்புகையில், சுல்தான் ஆல்ப் அர்ஸ்லன் என்ற அரசனின் அரசாங்கக் காரியாலத்தில் அவனுக்குப் பெரிய பதவி அளிக்கப்பட்டு, நாளடைவில் அவன் சுல்தானுக்கு மந்திரியானான்.

"சில வருஷங்கள் கழித்து அவனுடைய இரண்டு, பள்ளித் தோழர்களும், பழைய ஒப்பந்தப்படி, அவனுடைய அதிர்ஷ்டத்தில் பங்கு கேட்க வந்தனர். அவர்களில் ஒருவர் உமர்கயாம் மற்றவன் ஹஸன் - இல் - ஸபாஹ் என்பவன்.

"ஹஸன் அரசாங்கத்தில் தனக்கு முக்கியமான ஸ்தானம் வேண்டுமென்று கோரினான்.மந்திரியின் வேண்டுகோளுக்கு இணங்கி, சுல்தான் அவனை ஒரு பெரிய அதிகாரியாக்கினான். நாளடைவில் ஹஸன் தனக்குப் பேருதவி செய்த மந்திரியிடமே பொறாமைகொண்டு, அவனைப் பகைத்து வந்தான். மந்திரிக்குத் தீங்கிழைக்க வேண்டும் என்று செய்த முயற்சியில் ஹஸன் தோல்வியுற்று, அதிகாரத்தை இழந்து, ஊரூராக அலைந்து திரிந்தான். பிறகு அவன் இஸ்மேலியர்கள் என்ற பாரசீக ஜாதியார்களுக்குத் தலைவனாகி, மகம்மதிய உலகத்தையே ஒரு கலக்குக் கலக்கி வந்தான். கடைசியில் அவனுக்கு உபகாரம் செய்த நிஜாம் உல் - முல்கே அவன் கத்திக்கு இரையாகி முடிந்தான், என்றால் அவனுடைய தீக்குணத்திற்கு எல்லை ஏது?

"உமர்கயாமும் மந்திரியாகிய தம் பள்ளித் தோழன் நிஜாமிடம் தம் பங்கைக் கேட்க வந்தார்; ஆனால் அவர்

தமக்குப் பட்டமோ பதவியோ வேண்டுமென்று விரும்ப வில்லை. "உன் அதிர்ஷ்டத்தின் நிழலிலே எனக்கு ஒரு மூலையில் வசிக்க இடம் கொடுத்து விடு. நான் அங்கே இருந்துகொண்டு என் சாஸ்திர ஞானத்தைப் பரப்புவேன். உன் ஆயுள் - ஆரோக்கியத்தைக் குறித்துக் கடவுளிடம் பிரார்த்தனை செய்வேன். இதுவே நான் எவ்வளவோ வேண்டியும், அவர் எந்தப் பதவியையும் பெற ஆசைப்பட வில்லை. உண்மையில் உமர் பற்றற்றவர் என்பதைக் கண்ட மந்திரி, அவரை மேலும் வற்புறுத்தாமல், நைஸாப்பூர் பொக்கிஷத்திலிருந்து அவருக்கு வருஷத்துக்கு ஆயிரத்து இருநூறு மித்கல்கள் (பொன் நாணயங்கள்) கொடுக்கும்படி ஏற்பாடு செய்தான்.

"உமர்கயாம் பதினோராம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றியவர்; கி.பி. 1123ல் அவர் மறைந்ததாகச் சொல்லப் படுகிறது.

"உமர்கயாம் வான சாஸ்திரத்தில் மகா நிபுணர். மலிக் ஷா சுல்தானாக இருந்தபோது அவர் சுல்தானிடம் வந்து அரிய சன்மானங்களைப் பெற்றார். மலிக் ஷா புதிதாகப் பஞ்சாங்கம் கணிக்க வேண்டுமென்று கருதியபொழுது அதற்காக நியமிக்கப்பட்ட எட்டுப் பேர்களடங்கிய சபையில் உமரும் ஸ்தானம் பெற்றார். அவர்தான், ஜலாலி சகாப்தத்தை ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்தார். 'ஜீஜி மலிக் ஷாஹி' என்ற வான சாஸ்திர விஷயமான கணக்குகள் கொண்ட ஒரு புத்தகத்தையும் அவர் இயற்றினார்.

"'கயாம்' என்பது அவருடைய புனைபெயர். 'கூடாரம் கட்டுபவன்' என்பது அதன் பொருள். நிஜாம் - உல் -

முல்கினிடம் புகழ் பெற்றுச் சுதந்திரமாக வாழ்வதற்கு முன்பு கூடாரம் கட்டுவது அவருடைய தொழிலாக இருந்திருக்கு மென்று யூகிக்கலாம். ஏனெனில் அந்தக் காலத்திய கவிகள் தம் தொழில்களுக்கு ஏற்பவே புனைபெயர்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு வேளை கூடாரம் கட்டும் தொழிலை உமரின் தந்தையார் செய்து வந்திருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். உமர் கயாம் பாடல்கள் புனைந்ததோடு , பயிர்த் தொழிலும் செய்து வந்தார் என்பது அவர் கவிதை களிலிருந்து தெரிகிறது.

"உமரின் சிஷ்யர்களில் ஒருவராக க்வாஜா நிஜாமி என்பவன் அடிக்கடி அவரிடம் வந்து பேசிப்போவது வழக்கம். அவனுடைய சொந்த ஊர் ஸமர்கந்த். ஒரு நாள் அவர்கள் இருவரும் தோட்டத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்தபொழுது, உமர் அவனிடம், 'வடக்கத்தி காற்று ரோஜா மலர்களைக்கொண்டு வந்து தூவும் இடத்தில் என் சமாதி இருக்கும்' என்று சொன்னாராம். எத்தனையோ வருஷங்கள் கழித்து க்வாஜா மீண்டும் நைஸாப்பூருக்குப் சென்று தன் ஆசிரியரின் சமாதியை அங்கே கண்டான். அது ஒரு தோட்டத்துக்கு வெளியே இருந்தது. பழங்கள் குலுங்கும் மரக்கிளைகள் தோட்டத்துக்கு வெளியே இருந்தது. பழங்கள் குலுங்கும் மரக்கிளைகள் தோட்டத்து மதிள் சுவரில் படர்ந்திருந்தன. அவருடைய சமாதி மறைந்து போகும்படியாக மரங்கள் மலர்களைச் சொரிந்து கொண்டிருந்தன.

"உமர்கயாம் நாஸ்திகவாதி. அவருடைய 'ருபயாத்' பாரசீகக் கவிதையில் ஒரு புது மாதிரி. இந்த உலகமே அவருடைய சொர்க்கம். விதியில் அவருக்குப் பூரண

நம்பிக்கையுண்டு. விதியே அவருக்குக் கடவுள். ரோஜா மலர்கள், திராட்சை ரஸம், அந்த ரஸம் ததும்பி வழியும் பாத்திரம், அதை ஊற்றும் ஜீவனுள்ள பெண், இவைகளுக்குள் அவருடைய வேதாந்தம் பரவியிருந்தது. மதுவைப் பற்றி அவர் பாடியிருப்பதற்கு மேல் பாட முடியுமா என்பது சந்தேகம். அவர் ஒரு சமயம் மதுவே குடிப்பதில்லை என்று சபதம் செய்துகொண்டாராம். புத்தி தெளிவாக இருந்திருந்தால் அப்படிச் சபதம் செய்திருக்க மாட்டாராம்.

'விட்டுவிடுவோம் கள்ளே,
வேண்டாம்!' எனப் பலகால்
திட்டமிட்டேன் - எனினும் அப்போ
தெளிவோடு இருந்தேனோ?'

என்று அவர் தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளுகிறார்.

"உமர் மது, மாதர் என்றெல்லாம் பாடியிருப்பதற்கு வேதாந்தபரமான உட்பொருள் வேறு உண்டு என்று சிலர் சொல்லுவர்.

"உமர்கயாமைப் பற்றிச் சொல்லும்பொழுது அவருடைய 'ருபாயாத்தை' ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த எட்வர்ட் பிட்ஜெரால்ட் என்பவரை அவசியம் குறிப்பிட வேண்டும். இவருடைய காலம் 1809 - 1883. இவர் 1853ஆம் ஆண்டு 'ருபயாத்'தை இயற்றினார். அவருடைய இங்கிலீஷ் 'ருபயாத்' எல்லையற்ற புகழ்குப் பின்னால் ராஸெட்டி, ஸ்வின்பர்ன் முதலிய ஆங்கிலக் கவிகள் அதைக் கண்டெடுத்துப் பாராட்டிய பிறகு அது உலகப் பிரசித்தமடைந்தது. நமது ஹிந்துஸ்தானத்தின் சம்ஸ்கிருத நூல்களை எட்வின்

ஆர்நால்ட் ஆங்கிலத்தில் பிரசித்தப்படுத்தியது போல், பாரசீக இலக்கியத்தை பிட்ஜெரால்ட் பிரபலப்படுத்தினார். அவருடைய இங்கிலீஷ் 'ருபயாத்' எல்லையற்ற புகழ் பெற்று விளங்குகிறது.

"உமர்கயாம் எழுதிய 'ருபயாத்' 800 வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் தமிழில் முதல் முறையாக முழுதும் வெளிவருகிறது.

"கி.பி. 1389 வரை வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது. அவரே பின்னால் அநேகம் கவிஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார். 'ருபாயத்' பாடிய உமர் கயாம் அவர்களுடைய வரலாறு அடுத்தாற்போல் தனியாக எழுதப் பெற்றிருக்கிறது. ஆங்கிலத்தில் 'ருபாயத்' பற்பல தினுசாக, பற்பல விலைகளில், கண்ணைக் கவரும் முறையில் பதிக்கப் பெற்றிருக்கிறது. இதிலிருந்தே ஆங்கிலம் கற்றவர்கள் அதை எவ்வளவு பாராட்டுகிறார்கள் என்பது புலனாகும்." ப. ராமசாமி

பன்னிரண்டாம் நூற்றாண்டில் உமர்கயாம் அறிஞருக்கும் முன்னும் பின்னும் சமகாலத்தும் வாழ்ந்த அபீசு, அத்தர் போன்றோர் அன்பு, காதல், வாழ்க்கை, மது, இயற்கை என உண்மைப் பொருளைப் பாடல்களில் வாழ்க்கையை, உலக இயல்பை, நோக்கையும் போக்கையும் அறியாமல் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாது என்றும் உண்மையான பயனுள்ள எண்ணமே கூட வாழ்க்கையை அறிந்து கொள்வதன் விளைவாகத்தான் அமைகிறது என்றும் தம் பட்டறிவை பாட்டிலக்கியத்தில் படைத்தனர்.

எல்லா மாந்தர்களின் நன்மைக்காகவே பாடல்களைப் படைக்கிறோம் என்பதே உண்மைப் பாவலர்களின் ஒட்டு மொத்தக்குரல். 'பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா' என்றான் பாரதி. அதனால்தான் 'பாட்டின் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்று வாழ்வியல் மெய்ம்மைக் கோட்பாடாய்க் கொண்டு வாழ்ந்தான்.

மாந்த வாழ்வுடே அன்பின் வெற்றியை இலக்கிய வாயிலாகத் தருவதே பாவலரின் மேன்மையான உயர்வான பணியாகும். அதுவே எதையும் முழுமையாக நோக்கவல்லது. சுருக்கமாகச் சொன்னால் பாட்டிலக்கியம் அன்பின் பரிசளிப் பாகும். எந் நாட்டிலும் எல்லா மக்களிடத்தும் எக்காலத்தில் வரலாற்றில் கொடுமுடியாக விளங்குவது பாட்டிலக்கியமாகும்.

"பாட்டிலக்கியம் மாந்தனின் உள்ளுயிரை ஒளிவிடச் செய்யும் ஒரு பிழம்பாகும். அது எரிந்து ஒளியூட்டுகிறது. ஓர் உண்மையான பாவலன், தவிர்க்க இயலாதவண்ணம் எரிக்கும் வலியினால், தன்னையும் மற்றவர்களையும் உணர்ச்சியற்றுப் போகச் செய்கிறான். விழிப்புணர்வையும் ஊட்டுகிறான் என்பதுதான் இன்றியமையாத முழுமையான செய்தியாகும்." என்பார் இலியோ தோல்சுதாய். இவ் வகையில் தோன்றிய பாடல்களே உமர்கயாம் பாடல்கள். மேலை நாடுகளிலும் கீழைநாடுகளிலும் எழுத்து வடிவம் பெற்ற மொழிகள் பலவும் உமர்கயாமை உள்ளுவந்து ஏற்றன.

தென்மொழிகளில் கள்ளையும் காதற் தீயையும் சேர்ந்த தீர்சுவைப் பாடல்கள் எட்வர்டு பிட்சொரால்டின் மொழி யாக்கம் தழுவி 101 பாடல்கள் வெளிப்பட்டன. பிற மொழிகளில் அதன் மொழியாக்கும் எப்படியோ அறியேன்.

தமிழில் இருபதாம் நூற்றாண்டின் இடையில் கவிமணி தேவியும் - பாலபாரதி ச.து.சுபோகியாரும், பின்னர் சாமி சிதம்பரனாரும் பாட்டாக்கம் செய்தனர்.

பாரசீக மொழியின் நேர்மொழியாக்கமில்லாமல் தன் போக்கில்தான் எட்வர்டு பிட்சொரால்டு ஆங்கில யாப்பில் செய்துள்ளார்.

A Book of verse beneath the bough,
A Jug of wine, a loaf of bread and thou
Beside me singing in the wilderness
O, Wilderness were Paradise enow!

இதனைக் கவிமணி:

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கய்யிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையந் தனில்இவ் வனமின்றி
வாழும் சொர்க்கம் வேறுளதோ?

மேற்படி பாடலை ச.து.சு. யோகியார்:

மாதவிப் பூங்கொடி நிழலில்
மணிக் கவிதை நூலொன்றும்
தீதறு செந்தேன் மதுவும்
தீங்கனியும் பக்கத்தில்

காதலி நீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடுவையேல்
ஏதும் இனிக்கவலை இல்லை

இதுவன்றோ பரமபதம்

- என ஆங்கில மூலத்தோடொன்றியும் ஒன்றாமலும் சென்றாலும் ஆங்கிலத்தின் கருத்தூற்று நெருங்கி யுள்ளது. இப் பாடலையே அண்மையில், மாப்பெரும்புலவர் உ.வே.சா. போல் உமர்கயாமைத் தேடிய அவரிடம் அவர் நண்பரும் பாரசீக மூலத்திற்கு மிக நெருக்கமான மாறுபடாத ஆங்கிலத்தில் செய்த பாடல் இது:

I need a jug of wine, and a book of poetry
Half loaf for a bite to eat,
Then you and I seated in a deserted spot,
Will have more wealth than a Sulthan's realm

என் தமிழாக்கம் இது:

கிண்ண நிறைய மதுவும் செஞ்சோல்
கிளர்த்தும் பாடல் நூலுடன்
உண்ணும் சுவைசேர் மதுவும் போதும்
உனக்குநான், எனக்கு நீ
பண்ணிசைக்கும் இன்பம் நம்முள்
பாலை நிலத்தில் வாழினும்
மண்ணும் மன்னர்செல்வ வாழ்வின்
மேலதாகும் நம்வாழ்க்கையே!

கற்பவர் மூன்று பாடல்களையும் ஒப்பு நோக்கி உணர்க. மூலப் பாரசிகப் பாடலின் ஒலியமைப்பை ஓர் அறிஞர் வழி அறிந்தேன். உண்மையான பாட்டு மொழிக்கென்னத் தனி அளவும் வரம்பும் பொருண்மைக்கேற்ப உள்ளன. அவற்றைத் தான் யாப்பு என்கிறோம். அதனைப் பின்பற்றியே என் மொழி நடை.

புதிய தேடலில் மற்றும் ஒரு பாட்டு. ஆங்கில அமைப்பு இது:

If the firmament were ins my hand asin God's,
I would have razed it from the midst;;
I would have made another firmament such that
The free of heart might easily attain their desire.

இதனைக் கவிமணி:

அன்பே யானும் நீயும் இசைந்து
அயலில் எவரும் அறியாமல்
வன்பே உருவாம் விதியினையும்
வளைத்துள்ளாக்கி முயல்வோமேல்
துன்பே தொடரும் இவ்வுலகை
துண்டுதுண்டாய் உடைத்துப்பின்
இன்பே பெருகி வளர்த்திடுமோர்
இடமாய்ச் செய்ய இயலாதோ?

ச.து.சு. போகியார் இதனை:

காதலியே, ஈசனுடன்,
கலந்தோமேல் இப்படைப்பில்

மோது துன்பக் கோளம்எலாம்
முழுவதும் கைவசப்படுத்திப்
பொட்டெனவே போட்டுடைத்துப்
புதுமையுற நெஞ்சத்துக்கு
எட்டும்வகை இன்பத்தால்

இழைத்துப் படைப்போமே. இவ்விரு பாடலையும் விஞ்சும் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையாரின் நேர்மையான நம்பிக்கையான மொழியாக்கம் இதோ.

"காதல் அணங்கனாய்! நீயும் நானும் சேர்ந்தால்
காதோடு மூக்கில்லாக் காசினியின் கூட்டையெல்லாம்
மோதித் தகர்த்துத் துகளாக்கி அத்துகளைக்
காதல் உளநேர்வில் மீட்டுரு ஆக்குவமே"

திட்ப நுட்பம் செறிந்த பாட்டாக்கத்திற்குச் சான்று இது.

என் தமிழாக்கம் இது:

இறைவன் கையில் இருக்கும் விண்என்
கையகத்தில் இருந்திடில்
பொடிப்பொடியாய் நொறுக்கி அதைப்
பூண்டோடு அழித்து ஓட்டுவேன்
தடைகள் அற்ற என்றன் காதல்
வேட்கை தழுவும் வகையிலும்
படைத்தளிப்பேன் நானும் மற்றோர்
இனிய புதிய விண்ணகம்!

மூல மொழிபெயர்ப்பே சொன்மையில் முரண்பட்டுள்ளது. எனவே பாட்டிலும் பொருண்மை புத்துருவம் பெற்றுள்ளது.

எல்லாப் பாவலர்களும் வெறி கொண்ட பித்தர்களே என்பது ஒருபொது வழக்கு. பாரசீகப் பாவலன் உமர்கயாம் ஒரு வாழ்க்கைப் பித்தன். வாழ்வின்பத்தை முற்றும் முழுமை யாக நுகர்ந்ததின், வெளிப்பாடே இப் பாடல்கள். நாளை வாழ்வேன் என்பவள் அறிவிலி, இன்று வாழ எண்ணுவதுகூட காலங் கடந்த கருத்தே. நேற்றே வாழத் தொடங்கினவர் அழிவுடையர் என்பதே உமர்கயாமின் உண்மை உள்ளொளி. 'புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து' விளங்கும் புதிய கண்டெடுப்புகளைத் தமிழாக்கம் செய்கையில் இதனைச் செம்மை செய்தவர் என் அருமைத் தோழர் ம.இலெ. தங்கப்பா. அவர்க்கும் புதிய மொழியாக்கத்தை வரவேற்று நுகரும் இலக்கிய நேயர்கட்கும் என் நன்றி.

இந்த உலகில் உள்ள எவர்ககும்
உண்ணப் பாதி ஆப்பமும்
குந்தி வாழக் குடியிருக்க
வீடும் ஒன்று கொண்டவர்
இங்கு யார்க்கும் ஆண்டை அல்லர்
அடிமையரும் அல்லரே
'என்றும் மகிழ்க' என்றவர்க்குச்
சொல்க இன்ப வாழ்க்கையே.

அன்பன்
த. கோவேந்தன்

*

உமர்கயாம்

வண்ணமிக்க எழில்முகம் மாதுளம்பூக் கன்னமும்
சண்பகத்தின் தளதளப்பும் வடிவம் கொண்ட என்றனை
பண்பிறைச்சீர் ஒவியன் படரும் மாசு பழுந்திடும்
மண்ணின்காட்சிக் கூடம்தன்னில் வைத்ததேனோ? அறிகிலேன்!

குழப்பம் என்ற ஒன்றினைத்துக் கொண்ட வாழ்வு தந்தனன்
சலிப்பினோடும் என்றனைத் தவிர்க்கொணா உடைத்தனன்
பிறப்பிருப்பு இறப்பிவற்றின் நோக்கம் ஏதும் இன்றியே
விருப்பிலாது வேறுவேறாய் விலகிப் பிரிந்து கொண்டிட்டோம்

எனது வரவால் விண்சுழற்சிக் கேதும் ஆக்கம் இல்லையே
எனது பிரிவால் அதற்குப் பெருமை ஏற்றம் எதுவும் இல்லையே
எனது வருகை எனது செல்கை ஏன் எதற்கு என்பதை
எனது செவியில் ஏறும் வண்ணம் இனிதுரைப்பர் இல்லையே

உள்ளமே ஒ, இப் புதிர்க்கு விடைகள் ஒன்றும் கண்டிலை
தெளளியசீர் அறிவர் தேடும் முடிவை எட்டவில்லையே
கள்ளருந்திக் குறைவிலாத களிப்பில் ஆழ்ந்து திளைத்திடு
கொள்ளை இன்பம் மறுமையில்நீ கொள்வதென்ன உறுதியே?

வாழ்வின் பொருளை உள்ளம் உணர வகை இருக்கக் கூடுமோ?
வீழ்வின் போது மெய்ப்பொருள்தன் விழுமம் தன்னை அழுத்திடும்
ஆழ்ந்து நின்னைக் கொள்ளும்போதில் அணுவும் உன்னை அறிகிலாய்
சோர்ந்து நாளை உனை இழந்தால் அறிவதெதனைச் சொல்லுவாய்? 5

கடல் முகத்தில் கல்லடுக்கிக் கரை அமைக்க முடியுமா?
கடவுள் மீதும் கோயில் மீதும் கருத்திழந்து சலித்திட்டேன்,
தொடரும் நிரயம் ஏதடா? அவற்றிக்கு உரியர் யாரடா?
படரும் துறக்கம் ஏதடா? துறக்கம் சேர்ந்தார் யாரடா?

ஈறிலாத காலக் கழுக்கம் நீயும் நானும் அறிந்திலோம்
சீரிலாத இவ் வினாவின் சிக்கலிழக்கத் தெரிகிலோம்
போர்த்தி ரையின் இந்தப் பக்கம் நீயும் நானும் வாழ்கிறோம்
ஆர்த்த திரைதடான் வீழும்போது, நீயும் நானும் இங்கிரோம்

கடலை ஒத்த இந்த வாழ்க்கை இருளிருந்து பிறந்தது
படரும் உண்மை வாழ்வின் ஒளியை ஊடு சென்று பார்த்ததியார்?
அவரவர்க்குத் தகுந்த வண்ணம் அவரவர்தாம் பேசினார்
எவரும் உண்மை முகத்தின் தன்மை இன்னதென்று இயம்பிலர்.

விண்முகத்தைச் சூழ்ந்த கோள்கள் விளக்கி எதையும் கூறிடா
ஒண்திறங்கொள் அறிவர் யார்க்கும் ஐயம் உண்டு பண்ணிடும்
திண்மை கொள்நீ அழிவுக் கயிற்றில் சேர்ந்த பிடியை விட்டிடேல்
வண்மை சேர்அவ் ஆற்றல் கூட மயங்கி மயங்கிச் சுழலுமே.

வந்துவந்து போகின்றோம் நாம் வாழக்கை என்னும் வட்டமோ
அந்தம் ஆதி எதுவும் அற்ற தெளிவிலாத காட்சியாம்
எங்கிருந்து வந்தோம் என்றும் எங்குச் செல்வோம் என்பதும்
இங்கு யார்க்கும் தெளிவும் இல்லை, ஏதும்புரிய வில்லையே. 10

இறைவன் வையம் பொருள்அனைத்தும் எழில்கொழிக்க இயற்றிப் பின்
சிதையும் வண்ணம் சீரழிக்கச் செய்வதென்ன பொருளிலோ?
அருமையாக அமையுமாயின் அதை உடைப்பதேனடா?
பெருமை குன்றுமாயின் அந்தப் பிழைக்கு யார் பொறுப்படா?

கற்றவரும் பண்பினோரும் ஆனோர் கவின் ஒங்கியோர்
உற்ற மேன்மையோர் குழாத்துள் உறுவிளக்காய் நின்றனர்.
பட்டப் பகலின் ஒளியில் அவர்கள் பாழ் இருட்டைத் தவிர்வரோ?
கட்டுக் கதைகள் கூறிவிட்டுக் கண்கள் மூடிச் சென்றனர்.

முன்பிருந்து மறைந்தவர்கள் தம்மைத் தாமே மூடப்பொய்
நம்பிக்கையில் நாட்டம் வைத்து நானிலத்தில் புதைந்தனர்
செல்லுவாய்நீ மது அருந்து, செப்பும் உண்மை கேட்டிடு,
சொன்ன அவர்கள் சொற்கள் யாவும் தொடர்பிலாத பொய்யடா.

தெளிவிலாதோர் வாழ்வின் பொருளைத் தேடித் தேடி உழன்றனர்
கிளியைப் போல வாழ்வைப் பற்றிக் கிளைகிளையாய்க் கிளத்தினர்;
உலகின் உண்மை அறிகிலாது செருக்கி உரத்துப் பேசியோர்
சலிப்படைந்து தெளிவறிந்து சால அமைதி கொண்டனர்

விண்பரப்பின் காளைக் கோளும் வயமிருந்து சுழன்றிடும்
மண்பரப்பின் கீழிருந்து மற்றோர் காளை மறைந்துள
உண்மை காணக் கண்திறந்து பாரடா நீ பாரடா
மீண்டும் பழமைக் கழுதைக் கூட்டம் இடையில் நிற்கக் காணலாம்! 15

இளமை பொங்கும் காலம் இன்று வேனில் இன்பப் போதிதே
வளமை பொங்கும் மதுவை உண்பேன் வாழ்வின் ஆறுதல் அதே
பழிசொலாதீர் கசப்பென்றாலும், மதுவே எனக்கு இன்பமாம்
மது கசப்புத்தான்ஏன் என்றால் அதுவே என்றன் வாழ்க்கையே.

என் விருப்பம் படிநடப்பின் இங்கு நான்பிறந்திரேன்
என் விருப்பம் சாவென்றாலும் எப்படி நான் சாவதாம்?
நன்மை என்றே ஏதுமில்லை நலிந்த விடுதி ஈதடா.
வந்தும் என்ன? வாழ்ந்தும் என்ன? போயும் என்ன மேன்மையே?

வருகையாலும் போக்கினாலும் வாய்க்கும் நலன்கள் என்னவோ?
பெருகு வாழ்வாம் நெடிய நூலின் பின்னும் இழைகள் எங்கேயோ?
உருளும் புடவி வட்டத்தூடே உயர்ந்தவர்கள் பற்பலர்
எரியுமிழ்ந்தார்; சாம்பல் ஆனார்; புகையும் கூடஇல்லையே!

கோள்கள் என்னும் கூர்மிகுந்த வாளின் கொடிய வீச்சினால்
வீழ்ந்துபட்டு வற்றி வதங்கி விடுதல் இரங்கத் தக்கதே
வாழ்வில் ஆசை தீரு முன்னம், வருத்தம் இரக்கம் தருவதே
சூழும் சிறிய இமை நொடிக்குள் துடைத்தழிக்கப் படுவதே.

வாணாள் முற்றும் கிழத்தியோடு மகிழ்ந்து கிடந்த போதினும்
வாணாள் முற்றும் உலக இன்பம் மண்டிச் சுவைத்த போதினும்
வாணாள் முற்றும் கண்ட சுவைகள் சாவில் வந்து முடியுமே!
வாணாள் முற்றும் கண்ட கனவு அதுவும் கனவாய்ப் போனதே! 20

மகிழ்ச்சி கெட்டு, மகிழ்ச்சியாம் சொல் மட்டும் எஞ்சும் வேளையில்
கலக்கும் முரட்டு மதுவையன்றிக் காணும் தோழர் யாரடா?
பிடிப்பிறுக மதுக்கிண்ணத்தைப் பிடி, மகிழ்ச்சிக் கைகளில்!
பிடிப்பதற்கு வேறேதுண்டு, பீழை மிக்க வாழ்விலே?

பன்னூறாண்டுக் காலமாகத் தொடரும் பயணம் முடிகையில்
சின்னேரம்மே இளைப்பில் துயிலும் வாய்ப்புக் கிட்டும் போதினில்
என்னே நமது நெஞ்சம் என்னும் இழிந்த மண்ணின் மேட்டினில்
என்னே மீண்டும் நம்பிக்கையின் பசுமை தோன்றி முளைவிடும்!

பிறப்பிறப்பு வாயிலாடு மாந்தன் பெறுவது அனைத்துமே
வருத்தமுற்ற உள்ளமும் வாழ்வின் முடிவுமாகுமே!
இமைப்பொழுதும் வாழ்கிலா ஒருவன் மகிழ்ச்சி சேர்க்கிறான்
பிறப்பெடுத்து வாழ்ந்திடாதான் பேரமைதி கொள்கிறான்.

மண்ணினோடு சுழலும் விண்ணைப் படைத்தோன் யாவன் ஆயினும்
மண்டும் மாந்தர் நெஞ்சையெல்லாம் துயரில் இட்டு வைத்துளான்;
எண்ணிலாச் செவ் இதழ்கலுடன் இன்மணத்தேன் கூந்தலும்
மண்ணகத்தின் புழுதியூடு மட்க வைத்து மகிழ்கிறான்.

இறைவன் கையில் இருக்கும் விண் என் கையகத்தில் இருந்திடில்
பொடிப்பொடியாய் நொறுக்கி அதைப் பூண்டோடழித் தோட்டுவேன்
தடைகள் அற்ற என்றன் காதல் வேட்கை தழுவும் வகையிலும்
படைத்தளிப்பேன் நானும் மற்றோர் இனிய புதிய விண்ணகம்.

வகுத்தவன் தன் வரைபடத்தில் வகுத்து விட்டான் யாவுமே
மிகுத்த நன்மை தீமை எழுதி எழுது கோலும் மெலிந்ததது
தொகுத்த நமது துயரம் துன்பம் யாவும் தோல்வி கண்டன
வகைப்படுத்தப் பட்டுவிட்ட யாவும் காலம் தொடங்குமுன்.

வாணாள் ஒன்றைக் கூட்டவோ நாம் குறைக்கவோ ஓர்வழியில்லை
வாணாள் ஒன்று கூடின் குறையின் வருந்தி நிற்றல் ஏனடா?
வீணாய் இங்கே நீயும் நானும் விரும்பும் வண்ணம் இல்லையே.
காணாய் நமது கைகளால் கனிவதில்லை வாழ்க்கையே.

நல்வினைக்காம் உடுக்கள் இல்லை, துயர நாள்கள் பெருக்கிடும்
நல்கல் எவையும் நிலைஇலை; மீண்டும் பறித்துக் கொள்ளுமே.
அல்லல் உற்று மண்ணில் நாம் அவதிப் படுதல் காண்டிடில்
வந்து பிறவா மாந்தர் இங்க வர நடுங்கு வார்களே.

ஐந்து பூத விளைவும் நீ, ஏழு கோள்கள் வார்ப்பும் நீ
ஐந்தும் ஏழும் அடுத்தடுத்து அமைதியன்றிச் சுழல்வதால்
மைந்தனே நீ மது அருந்து! மாண்டால் மீண்டும் வந்திடாய்
ஐந்திரண்டு நூறு முறை நான் அடுத்தடுத்துக் கூறினேன்

சூளையில் என் மண்ணிசை சுட்டெடுக்கும் வேளையில்
ஆளும் தொல்லை துன்பங்கள் அனைத்தும் அங்குச் சேர்ந்தன,
மேலும் நானும் என்னிலும் சிறந்து மேவல் எங்ஙனம்?
நானும் அன்று வாரித்த வண்ணம் நானாகவே இருக்கிறேன். 30

சுடர்கொள் தொழுகை விளக்கையும், தீயின்கோயில் புகையையும்
நிரயத் துறக்க இயல்பையும் நெடிது பேசி என் பயன்?
விதியின் பலகை பாரடா! விளைவு முழுதும் காணலாம்!
இறைவன், காலம் தொடங்குமுன் எழுதிவைத்த வண்ணமே!

நெஞ்சமே இவ் உலகின் மெயமை நீழல், உளளீடு அற்றதரம்!
மிஞ்சும் இந்தத துனபம் பற்றி எத்துணை நாள புலம்புவாய்?
அஞ்சிடாய் இவ் உடம்பினை விதியிடதில விடடிடு,
கெஞ்சினாலும் மிஞ்சினாலும் விதியின் எழுதது மாறுமோ?

விண்ணகம் எனக்கிதை விளம்பிறறிது கேளடா,
என் விதிதான் யாதென இங்கு நீ அறிவையோ?
சுண்ணம் போல என் சுழந்சி எனது கையில் இருகுமேல
முன்னமே இச் சுழறசியை முற்றும் விடடிருபபேனே!

நன்றும் தீதும் அவரவாதம் மனத்தின் நாடடம பெற்றன,
இன்பம நமது பேறு, துன்பம் எண்ணம் விளைத்த விளைவுதான
பின்னும் கோளகள மீது சுமத்தும பிழைகள், ஏதும் இல்லையே
நின்னிலும பல்கோடி மடஙகு நிலைக்கு அடிமை அவைகளே

வாழ்வின் இளமை நூலின கால ஏடு முடிந்துவிடடது,
வாழவின இனிய வேனிற் காலம் வாடடும், வாடையாயிறறு,
வாழ்வின் இளமை என அழைகுகும பருவம், வருதல் முடிநததும
ஆழ்ந்து காண முடியவிலலை என்ன அுவல வாழ்விது!

35

நமது வாழ்வின் இருப்பனைத்தும் தீர்ந்து வெறுமை ஆகிடும்
அமைந்த ஊழின் காலடிக்கீழ் அளவில் நெஞ்சம் நொறுங்கிடும்
இவணிருந்து சென்ற மக்கள் வாழ்விது என்றே இயம்பிட
அமர நாட்டிருந்து மக்கள் எவரும் திரும்பவில்லையே.

குழந்தைப் பருவக் காலந் தன்னில் கூடுகின்றோம் குருவிடம்
இழந்து பருவம் கூடும் காலம் எய்தும் அறிவால் இடறினோம்,
உழன்று போகும் வாழ்வின் போக்கு வகுத்தளிப்ப தொன்றுதான்
புனலைப் போல வந்திருந்தோம் காற்றைப் போலப் போகிறோம்.

ஆடிப் பாடிக் களித்திருந்த தோழர் தாமும் அகன்றனர்,
ஓடிக் காலன் ஒருவர் பின்னர் ஒருவராக மிதித்தனன்
வேடிக்கையாய் மது அருந்தி ஒத்த காலத் திருந்தனம்,
நாடி முன்னே குடித்தவர்கள் நமக்கு முன்னே சென்றனர்.

விண்ணகத்தின் ஆழியே உன் கெட்ட மதியால் வீழ்கிறோம்!
மண்ணகத்தில் அறம் அழித்தல் தொன்றுதொட்டுன் மறந்தொழில்
புண்ணுற்றுள்ளம் பிளக்குமாயின் வருத்தம் வந்து பொங்கிடும்;
எண்ணிலாத மதிப்புயர்ந்த மணிகள் உன்னுள் இருந்திடும்.

அறிவர் தங்கள் விருப்பிற்கு ஏற்பக் கால ஆழி சுழலுமா?
நெறிசெல் கோள்கள் ஏழு எட்டு என்று நினைக்கும் கணக்கும் பயனிலை
முறியும் ஆர்வம் மறையும் வாழ்வின் முடிவும் உறுதி ஆதலால்
எறும்பு ஒநாய் எது தின்றாலும் இரண்டும் மண்ணில் ஒன்றுதான். 40

விண் உதிர்க்கும் மழையின் துளியும் விழுந்த கடலில் ஒன்றிடும்
மண் உதிர்க்கும் சிறிய துகளும் மண்ணினோடு கலந்திடும்
இந் நிலத்தில் வரவினாலும் இறப்பினாலும் என் பயன்?
கண்முன் தோன்றிப் பறந்து மறையும் ஈக்கள் போலும் நாமடா!

பகுத்தறிந்த படைப்பினாலே வனைந்தெடுத்த பாண்டமே
மிகுந்த அன்பின் கையணைப்பில் மேவிற்றெண்ணில் முத்தமே
வகுத்த உலகக் குயவன் இதனை அருமையாகச் செய்தனன்
தொகுத்தெடுத்தோன் மீண்டும் அந்த மண்ணை மண்ணோடெறிந்தனன்.

இந்த வாழ்வின் நிலையிலாத வகையை நீயும் வினவுவாய்,
அந்த உண்மை சொல்வோமாயின் அஃதோர் நெடிய பெருங்கதை,
முந்தும் ஆழி இருந்துவந்த வாழ்க்கை வகை ஆனதாம்
வந்த கணமே மீண்டும் அந்த ஆழிக்குள் மறைந்ததாம்.

பற்பலவாம் அங்கமாகிப் பாண்டம் வடிவம் கொண்டது,
கட்குடியன் அதனை உடைக்க உரிமை ஏதும் இல்லையே
எத்தனையோ இனிய தலைகள் கால்கள் கைகள் கொண்டன
அத்தனையும் யாரின் அன்பால்? யாரின் வெறுப்பால் உடைந்தன?

உலகம் உனக்காய் உருவு கொண்டு படைக்கப்பட்ட தாயினும்
உலகறிஞர் தவிர்த்த ஒன்றை ஒடி நீயும் தேடிடேல்
உலகில் உனைப்போல் வருவோர் செல்வோர் எண்ணடங்கார், ஆதலின்
உலகம் உன்னைப் பறிக்கும் முன்னர் உன்றன் பங்கைப் பறித்துக்கொள்

இந்த நெடிய வழியில் சென்ற பேர்கள் பலருள் திரும்பியே
வந்தவர்யார்? கண்ட கழுக்கம் வாயுரைத்தார் எவருளார்?
இந்தப் பிறப்பு இறப்பு இரண்டு வழியை அறிந்து தேவையைச்
சிந்தியாமல் நுகர்ந்து கொள்நீ மீண்டும் தரும்பல் இல்லையே.

துணையும் இன்றி நண்பர் தோழர் எவரும் இன்றி மண்ணினில்
இணையப் போகும் ஒருத்தனே நீ இனியமதுவை ஏந்தி உண்
பிணையும் இந்தப் புதிரை எவர்க்கும் சொல்லிடாமல் காத்திடு,
மண்ணில் மலர்ந்து உதிர்ந்த மலர்கள் மீண்டும் மலர்வதில்லையே.

த கோவேந்தன

மதுக்கடைக்கண் முதியோன் தன்னைக் கண்டு நானும் வினவினேன்
"இதுவரைக்கும் இருந்து சென்றோர் செய்தி ஏதும் தெரியுமா?"
"மது அருந்த வந்து நம்மைப் போலச் சென்றோர் பற்பலர்,
இதுவரைக்கும் திரும்பி வந்தோர் எவரும் இல்லை" என்றனன்.

அங்கும் இங்கும் எங்கும் என்று சுற்றிச் சுற்றி அலைந்துளேன்,
கங்குக்கரை அற்ற உலகின் எல்லை யாவும் திரிந்துளேன்,
இங்கிருந்து சென்றவர்கள் திரும்பி வந்த தில்லையாம்,
தங்கி இருந்தோர் சென்ற சாலை திருப்பம் அற்ற சாலையாம்.

விண்ணகத்தின் ஆண்டைஅவன் ஆட்டிவைக்கும் பாவை நாம்
உண்மை இஃது புனைந்துரைக்கும் உருவகம் ஈதல்லவே;
கொண்ட வேடம் பூண்ட மட்டும் கூத்தாங்கில் நடிக்கிறோம்,
கண்டதென்ன அடுத்தடுத்துக் காட்சி விட்டு மறைகிறோம். 50

நீண்ட நாள்கள் வாழ்வதில்லை நிலமும் பொறுப்பதில்லையே
பூண்ட பெயரோ புகழின் குறியோ நிலைத்திருப்பது இல்லையே
ஈண்டு முன்நாம் இருந்ததில்லை, உலகிற்கு இழப்பும் இல்லையே
மாண்ட பின்னும் மடிவதில்லை வையம் என்றும் இருக்குமே.

உலகமீதில் காண்டபதென்ன உறங்குகின்ற பேர்களே;
உலகின் அடியில் காண்பதென்ன? உறக்கம் கொண்ட பேர்களே;
உலகில் என்றும் காண்பதென்ன? வெறுமை வெறுமை வெறுமையில்
உலகில் இருந்து மறைந்தோர் பிறவார் தம்மையே நான் காண்கிறேன்.

தங்கிச் செல்லும் பழைய் விடுதி இதனை உலகம் என்கிறோம்
கங்குல் பகலாம் கருமை வெண்மை கலப்பிலான ஒய்வில்லம்
பொங்கும் மன்னர் பலர் நுகர்ந்து கழித்த விருந்துக் கூடமாம்
இங்கு நூறு வல்வில் ஓரி உறங்குகின்ற கல்லறை.

பொற்கலத்தில் மதுவை ஏந்திப் பூரித்திருந்த அரண்மனை,
பொற்றை ஆடு நரிகளுக்குப் புகலிடமாய் ஆயிற்று;
ஒற்றை வில்லில் நாலைந்து உயிர்கொல் ஒப்பில் வல்வில் ஓரியை
இற்றைக் கெங்கே கல்லறைதான் வேட்டையாடி வீழ்த்திற்றே.

செஞ்சிக் கோட்டை மலையின் மீது செம்போத்து ஒன்று திரிந்துபின்
செஞ்சி மன்னன் சிலையின் மீது கூர்உகிர் கொண்டுற்றது,
விஞ்சும் உன்றன் முரசம் எங்கே? மணிஓலிப் பண் எங்கெனக்
குந்தி இருந்து கேட்டதைய, வெட்கம் வெட்கம் வெட்கமே! 55

விண்ணளாவி வீறுயர்ந்து வெற்றி கண்ட அவ்விடம்,
மண்டி இட்டு மன்னர் எவரும் வணங்கி நின்ற அரண்மனை
கொண்ட அந்தக் கொத்தளங்கள் எங்கே எங்கே என்றொரு
வண்புறாத் தான் வாய்திறந்து வினா எழுப்பல் கேட்டிரோ?

அருமை வாய்ந்த என்றன் உன்றன் உயிரிரண்டும் அகன்றபின்
பெருமையாகக் குழியின் மீது கல்லிரண்டு பரப்புவர்,
வருகை கொள்ளும் அடுத்தடுத்து மாண்டவர் தமக்கெலாம்
உருவம் ஆக்க நமது துகளை ஒன்றிணைத்துக் கூட்டுவர்.

மண்ணின் ஒவ்வொர் துகளும்கூட வானில் ஒளிரும் பருதியின்
வண்ண மிக்க கன்னிமாடம், வைகறைமீன் நெற்றிகாண்,
கொண்ட ஆடை உதறும்போது விழிப்புணர்வு கொண்டிரு,
கண்மணக்கும் கவின்மிகுந்த முகங்கள் ஆகும் அவையுமே.

ஆன்றவிந்த சான்றோரே நீர் விடியற் போதில் விழிமினோ,
ஏந்தி நின்று துகள் சலிக்கும் இளைஞனை நீர் நோக்குவீர்
தோன்றல் கரிகால் வளவன் அறிவைத், தொண்டைமானின் விழியினை
ஈன்ற குழவி எடுப்பதைப்போல் எடுத்து வைக்க இறைஞ்சுவீர்.

இனிய காலைப் போதில் காற்றுச் சிவந்த மலரைச் சிதைத்தல் பார்,
கனியக் கனிய அல்லிசைப்புள் கண்டுவந்து பாடக்கேள்,
தனிமையாகச் செம்மலர்கள் வனத்து நீழல் தங்கிடு,
மண்ணில் மலர்ந்து மண்ணில் மறையும் மலர்கள் கூட்டம் எத்தனை? 60

விம்மி முகில்கள் பசும்புல் வெளியில் மழையின் விழிநீர் கொட்டின,
செம்மையான மலர் நிகர்த்த மதுவிலாது வாழ்விலை,
இன்பமான இப் பசும்புல் நிலத்தில் இன்று களிக்கிறோம்
இன்பமாக நாளை எவர்க்கு மாறுமோ எம் கல்லறை.

புதிய ஆண்டின் முகில் துளிகள் பூக்கும் மலரை நனைக்குமுன்
விழித்தெழும்பு, மதுவின் கிண்ணம் கையில் ஏந்திக் களித்திடு,
மதுகை ஈந்து மகிழ்வளிக்கும் பசுமையான புல்வெளி
மறுநாள் உன்றன் உடல் புதைத்த மண்ணில் புதுமை கொண்டிடும்.

ஒடை மருங்கில் ஒங்கி வளரும் உயிர்ப்பு மிக்க பூங்கொடி
பாடமைந்த வான்அணங்கள் பவழவாயில் படர்ந்ததே,
ஒடி முரட்டுத் தனமாய் அவற்றை உன்றன் காலால் மிதித்திடேல்
கூடிக் கொஞ்சும் மண்ணிருந்து செழித்துக் கொழித்த மலர்களாம்.



வினணகம்தன கணனை உனறன் உயிரினமீது வைதததால
கிணணம ஏந்தி மது அருந்து பசுமபுல மேலே குநதுவாய,
வணண மதுவை உண்க பசுமை வணணப் புற்கள நாளை உன
மண்ணிலும என் மண்ணிருந்தும மகிழ்நது வளரக் காததுள.

கடடுமானப பணியில உழைகுகும மாநதனை நாள காணகையில்
மடடம தடடிக களிமண் தன்னை மாறி மாறி மிதிததனன்
சற்று நிறுதது, நாளை உனையும் என்னைப போனறு பற்பலர்
தொடடு மிதிததுத துளைப்பா என்றே எதிர்பபின் குரலைத் தந்தது

உளளுணாசசிக் கேகுவீர் உம கிண்ணம் கலயம் ஏந்துவீர்,
வெளளியோடை மருங்கில் உள்ள பசும்புல் வெளிக்குச் செல்லுவீர்,
துள்ளியோடும கால ஆழி கன்னிப் பெண்டிர் உருஷினைக
கள்ளின் கிணணம கலயமாக மாறறி மாற்றி அமைக்குமே.

கடந்த இரவு மணகுடததைக் கலிலெறிந்து உடைத்திட்டேன,
மடததனததைச செயதபோது மது மயக்கில் இருந்திட்டேன்,
சடகெனறநதச சிதைநத பாண்டம "உனனைப் போல்நானிருந்திடடேன்
நடக்கும் நாளைப பொழுதில எனைப்போல ஆவாய்" என்று நவின்றதே.

சாலையோரம் உனறன மண்ணை எனறன் மண்ணைக கலநதுமே
கோலை ஊனறி மதுவின குடமாய ஆககு முனனர்ச் சிறுவனே,
ஆலையின் மதுகுகுடதை எடுததுக கிண்ணம நிரபபுவாய்,
ஏலுமட்டும குடிதது நீபின எனகளிதது உவநதிடாய

நேற்று முனனாள பானை வனையும் குயவனை நான் கண்ணுற்றேன,
ஆற்றல் அரிய செயலதிறங்கள் அவன்கை வணணம் ஒங்கின;
பாக்கும ஆற்றல அறற குருடர் பார்ககா ஒனறைப் பார்த்திட்டேன்
வீற்றிருந்த மண் அனைததும எநதையின் மண இருந்ததே.

உனககேதேனும் உணாவிருந்தால நிறுத்து நிறுத்துக குயவனே,
மனிதத மண்ணின் மாணபழிததாய், காலங் கால மாகநீ
தனககொப பறற தெனனிலங்கைத தலைவன் அருளின் கையினை
உனகக்மைநத ஆழி வைததுச் சுறறல் என்ன உரிமையோ? 70

பாணடம் செய்யும் கலையில் வல்ல குயவன காலகள தூக்கியே
ஆண்டிருந்த ஆழி மீது வைத்திருநதான் வினைகையில்
ஆண்ட மனனா மண்டைமண அடிமை மாந்தன் ஒருவன்மண்
ஈண்டெடுததுக் கலயமுடி இஃதெனறவனும் வடித்தனன்.

கலயம் கூட எனறனைபபோல காதல கொணடிருநதது,
கலயம் வனபபு மிகக பெணணின் கூநதலால கடடுணடது,
கலயக கழுததில காணும இநதக கவினமிகுநத கைபபிடி
குலவும பெணணின கழுததில அவனின கோலக கையாய இருந்ததே

கடநத இரவு குயவன் கடையில் இருநதேன், இரண்டு ஆயிரம்
குடங்களில சில பேசின சில பேசிடாமல இருநதன;
குடஞசெய கோவைக குடங்கள விறபோ வாங்குவோம் எங்கென
அடங்க லாக ஆவததோடும ஒனறோடு ஒன்று பேசின

தடுககபபடட மதுககுடிபபோகை. இருபபின இருக்கிறேன்,
கடவுள மறுபபோ னாகசசிலை வணங்குபவனா இருப்பின் என்?
அடபே எனனைச சமய வாணா பலரும் ஐயுற்றெணணுவர்,
கிடகுமாறு எனக்கு நானே உணமையாய்க கிடகிறேன்.

மது குடிததல மகிழ்ந்திருததல் எனறன வாழவின் சீர்அறம்,
எதிலும நமபல, நமபிடாமை இரணடிலும கடடறறவன்,
ஸீதியாம மணப பெணணை நானும விலை என எனறு கேடகையில
எதிருரைததாள "சடிலாஉன நெஞச மகிழவே" எனறனள. 75

மின்னும் மது இலாமல் என்னால் மண்ணில் வாழ முடியுமா?
இன்னல் சுமையை மது இலாமல் ஏற்றுச் சுமப்பதெப்படி?
இன்னும் கொஞ்சம் என்றிறைஞ்சி வாங்குபவன் அளிக்கையில்
இன்னும் ஏற்க இலாதெனும்சொல அதறகேள அடிமை ஆயினேன்

இற்றை இரவு குடம் தளும்ப இனிய மதுவைக் காய்ச்சிவோம்,
ஒற்றை இல்லை, இரண்டு கிண்ணம் ஒளிர அதனை ஊற்றுவேன்,
பற்றை என்ன, பகுத்தறிவைப் பாழ்மதத்தை விலக்குவேன்,
மற்றும் வாழ்வின் மணாட்டியாக மதுவின் மகளை ஏற்பனே.

மாந்த வாழ்வின் முடிவு தனனை மற்றவர்க்குக் காட்டவே
மாய்ந்தபின் என்சாம்பல் தன்னை மண்ணில் வீசி எறிகுவீர
ஏந்தும் என்றன் பிணமண் தன்னை மதுவினால் நனைக்குவீர
மாய்ந்த உடல்கொண்டு மதுவின் பானை வாயை அடைக்கவே

இறந்த பினனர் என்றன் உடலை இனிய மதுவால சுழவுங்கள்,
இறந்த என்னைப் புதைக்கும் போதும் மதுநூல் ஒதி ஏத்துங்கள,
இறக்கும் நாளில என்னை நீங்கள ஙங்கிருந்து காணுவீர்?
கிறக்கும் மதுவின் வாயிற் கடையில் கிடநதிருப்பேன் பாருங்கள



மடிந்த பின்னர் மண்ணுக்கு அடியில் நான்புதைந்து இருப்பினும்
குடித்த அளவிலாத மதுவின் நறுமணந்தான் கொழிததெழும
அடுத்தென் குழியின் துகளின் ஒரம மிடாகுடியன வந்திடின்
மடுக்கும் என்றன் பிணத்தின் மணமும் வெறியனாக்கிடும்.

என்றன் வாழ்வின் வேர் பிடுங்கி எறியுங்காலை, சூழ்ந்துள
என்றன் உற்றார் உறவோர் எவரும் விலகிச் செல்கையில்
என்றன் மண்ணே இனிய மதுவை ஏநது கிண்ணமாகி நல்
ஒன்றும் மதுவும் ஊறுமாகில் என்றன் உயிரும் உயிர்த்தெழும்.

சாவின காலின் நெடுஞ்சாண் கிடையாய் நான் இருக்கும் வேளையில்,
மேவும் எனது வாழ்வின் விருப்பம் பிடுங்கி எறியப் படுகையில்,
ஆவலோடும் எனது மண்ணை மதுவின் கிண்ணமாக்குவாய்
மேவும் மதுவின் மணம் என் வாழ்வில் புதிய வாழ்வு தந்திடும்

கூடி மகிழும் கூட்டத்தோடு நீ இருந்து குடிக்கையில்
நாடி நிற்கும் நண்பர் தம்மை நீ நினைக்க வேண்டுமே
நீடித்தநார் மது அருந்தி நெஞ்சம் மகிழ்ந்திருக்கையில்
மூடிக் கவிழ்ப்பாய் எனது கிண்ணம் மூச்சு முட்டி நிற்கிறேன்

அறிதிறத்தின் அடிமையாவோர் நிலைத்தல் பற்றி வையக
நெறியில் உள்ள நிலையாமையை நினைத்து வெறுமை யாகுவர்
அழிந்த நீபோய் அருமைப் பழத்தின மதுவின் சாற்றைத தேர்நதெடு,
அறிகிலாதார் மது அருத்திக்க னியும் முன்னே அழிகிறார்

தூய தீர்ப்பின் அறம் உரைக்கும் சடடத் துறையின் வாணரே
மேய குடியில் மிதக்கும் நாங்கள் உங்களினுமை தெளிந்தவர்,
ஆய மாந்தர் குருதி குடிப்பீர் நாங்கள் மதுவை மாநதுவோம்
தோயும் நேர்மை கூறல் வேண்டும் குருதிக் கொடியர் நம்மில் யார்? 85

மதத்தின் வெறியன் விலைப்பெண் கண்டு மதுவை அருந்திக் கணந்தொறும்
வதைக்கும் மாயக கவர்ச்சி வலையில மாடடுகின்றாய் என்றனை
மதப் பற்றாள, நீ இயம்பும் வண்ணம் உளளேன் உண்மையே,
முதற் குற்றம்நீ காட்சிக் கேற்ப முழுமையாக இலலையே

காதலர்கள் மது குடிப்போர் நரகில வீழவா எனகிறா
ஆதரவாய் ஏற்றுக் கொள்ள அரிய ஆணைக கூற்றிது.
காதலாகள் மது குடிப்போர நரகில் சென்று வீழ்வரேல்
ஒதும் துறக்கம் நாளைப் போதில் வெறுமை ஆகிப் போகுமே

துறக்க நாட்டில எழில்அணங்குத் தோழமை உண்டு என்கிறார்,
உறக்கம அற்ற தூய மதுவும தேனும ஒடும என்கிறாா
மறகக முடியும மதுவும் மாதும் தோநதெடுததல் தீமையா?
சிறககவைககும் மணணில் உறற சிாக கைம்மாறும ஈதனறோ?

வானகததில எழிலஅணஙகா, வறறாப பொனனுறறு உளளதாம்,
ஆன மதுவும பாலுத் தேனும அளவிலாமல கிடைக்குமாம
பான மதுவைக கலத்தில ஊறறிக கையில பாஙகாய்த் தநதிடு,
ஆனை நூறு நாளை வருமுன கிடைகும குதிரைமேலதே

விணவனததை அழகு மாதா புலனகள ஆர விளைபபராம
மணணகததில மதுவின சாறு மகிழவளிக்கும எனகிறேன்
கணமுன உளள காசு கொளநீ கடனை நாடல் ஏனப்பா?
நணபனே கேள, தொலைவில முழஙகும முரசின ஓசை இனிமைதான 90

நெஞசமே அத துறகாம நிரயம நேரில கணட திலலையே,
அனபனே சொல அஙகிருநது திருமபிவநதோர் யா கொலோ?
நம்பிகைகள கூறு யாவும் பெயர்கள மீதில வைபபதா?
உண்மையறற கறபனைமேல உளளம வையாய தோழனே

எனைப் படைத்தோன் துறக்கத்திற்கோ இன்னல் நரகிற் காகவோ
தினைத் துணையும் அறிகிலேன் நான் தெளிவிலாத ஒன்றிது;
இனிக்கும் கிண்ணம், காதல்துணை, இசைப்பண் மூன்றும் இருந்திடில்
தனித்த செல்வம் அவை! துறக்கம் வெறுங்கடன் சீட்டாகுமே.

இந்தப் புடவிப் பரப்பில் நமக்குத் தங்குதற்கோர் இடமில்லை,
செந்நிறத் தேன் மதுவும் மாதும் இல்லையாயின் வாழ்விலை,
இந்த உலகின் இயற்கை பற்றி ஆர்வம் அச்சம் ஏனடா?
சென்ற பிறகு நிலைப்பும் படைப்பும் எனக்கு இவ் உலகில் ஒன்றுதான்.

என்றன் விருப்பம் கருதியா நான் இந்த உலகில் வந்தனன்,
சென்று மறைதல் தானும் என்மேல் வலிந்து திணிக்கப் படுதலால்
அன்தச் சிறுவ, கச்சை இறுக்கிக் கட்டி விரைந்தெழுந்து வா,
கொன்றழிக்கும் உலகின் துயரைக் குடிக்கும் மதுவால் கொல்லுவேன்.

வாழ்வின் இறுதி எய்தும்காலை வடக்கும் தெற்கும் ஒன்றுதான்,
ஆழ்ந்த கிண்ணம் நிரம்பும் போதில் இனிப்பும் கசப்பும் ஒன்றுதான்,
வீழ்ந்து மகிழ்வில் திளைத்திருப்போம் காலம் நம்மை விழுங்கினும்
ஒங்கு நிலவு வளரும் தேயும்; உலகம் மாயை இல்லையே! 95

ஆர்வத்தோடு மது உண்டாடும் அவர்கள் வழியில் செல்லடா!
ஈர்க்கும் மங்கை, இனிய மதுவும் இசையும் நேடிக் கொள்ளடா!
சேர்க்கும் மதுவின் கிண்ணம் கையில், மதுவின் தோற்பை தோளிடம்
திளைப்பாய் மதுவைக் காதற் பெண்ணே,வாயலப்பல் தேவையா?

எனது வேணவாக்கள் சிறுவ! எழும்பும் கூச்சல் ஆயின;
எனது குடியின் வெறியும், மிஞ்சி எல்லை கடந்துவிட்டது,
எனது நரைத்த தலையும்கூட மயக்கத்திற் குள்ளானதே,
இனிய மதுவால் முதிய உள்ளம், இளமை வீறு கொண்டதே.

கிண்ண நிறைய மதுவும் செஞ்சொல் கிளர்த்தும் பாடல் நூலுடன்
உண்ணும் சுவைசேர் உணவும் போதும்! உனக்கு நான் எனக்கு நீ!
பண்ணிசைக்கும் இன்பம் நம்முள்! பாலை நிலத்தில் வாழினும்
மண்ணும் மன்னர் செல்வ வாழ்வின் மேலதாகும் நம் வாழ்க்கையே.

புறத் தோற்றத்தின் மெய்யும் பொய்யும் நன்கு நானும் அறிந்துளேன்
அகத்தில் தோன்றும் ஒவ்வோர் எழுச்சி வீழ்ச்சியும் தெரிந்துளேன்
இதற்கு மேலாம் அறிவுகொண்டு, குடியின் வெறியைத் தாண்டிய
சிறப்பின்நிலை உண்டென்று கொள்ள நானும் வெட்கம் கொள்கிறேன்.

மது அளநத சிறுவனுககு நனறி, உயிரோடிருககிறேன
எனககு மாநதா நடபு வாழவில நனறிககேடே எஞசிடும,
மதுவின கிணணடி இரவு தாணடி எஞசியதோ ஒனறுதான
இதுவரைககும போக எஞசி இருககும வாழககை அறிகிலேன

அறிவிலாமல வளாநது விடட மாநத உருவம் வீணதாம
நெறிசெல ஒனபான் கோளும கெரணட பரநத பூடவி வீணதாம
சிறபபிருபபில அழிதல உறுதி மகிழவில் திளைததே ஓய்வுகொள
சிறிய போழதில தோனறி மாயவோம சிறபபுயாதும இலலையே.

உலகைக கணடாய, கணடதெலலாம ஒனறுமறற வெறுமையே,
பலவும சொன்னாய பலவும கேடடாய் படிதததெலலாம வெறுமையே,
வலதுகோடி இடதுகோடி ஓடி உழலல வெறுமையே,
இலததிருநது வாழநத வாழவும ஏதுமறற வெறுமையே

விருபபம போல உலக இயககம் இயஙகுமாயின எனபயன்?
பெருககமான வாழககை நூலைப பெிது கறறும எனபயன?
ஒரு நூறாணடு மனம நிறைநத வாழவிருநதும என்பயன?
மருவி மேலும நூறறாணடெயதி வாழும வாயபபும எனபயன?

அழிம்பன் ஒருவன் ஓரிடத்தில் அசைவிலாமல் இருந்தனன்,
செழிக்கும் உலகு, கடவுட் பற்று, நம்பிக்கை மற்றின்மையால்
விழிப்புணர்வு கடவுள் அறம் விதி அவனுக்கு இல்லையாம்,
உறுதிப்பாட்டில் இவனைப் போலும் மண்ணில் விண்ணில் யாருளார்?

நம்மையெல்லாம் விழிப்பில் ஆழ்த்தும் நகரும் கோளை ஆய்நிதிடில்
செம்மையான ஒளியின் வண்ணச்சித்திரக் காட்சியேகொலாம்
செங்கதிர்தான் கொழுவிளக்கு, வையம் ஒளியின் கூண்டுகாண்
இங்கு நாமோ சுவரில்தெரியும் சுழலும் நிழல்கள் ஆகிறோம். 105

எல்லாம் நம்மை வெறுமையாக விட்டு விட்டுச் செல்வதால்
எல்லாவற்றின் பயனும் என்ன? இழப்பும் அழிவும் இரண்டுமே
இல்லா ஒன்றே உலகில் என்றும் இருப்பதாக உள்ளது,
உள்ளதென்று கொள்வதேதும் உலகில் இல்லை இல்லையே.

இந்த உலகில் எந்த ஒன்றையும் நான் எய்தவில்லையே
என்றன் வாழ்வில் உழைப்பை தவிரப் பெற்றதொன்றும் இல்லையே
குந்தும் விருந்தின் விளக்கு நானே அமர்ந்தால் ஒன்றும் இல்லையே
மொந்தை யும்நான் உடைந்த பின்னர் முற்றுமாக இல்லையே.

பற்றிலா தனிமைலிருந்து பற்றுக் கோடோர் வீச்சொளி
உற்ற ஐயம் தெளிவிரண்டின் ஊடு நிற்கும் சொல்லசை
வெற்றிப் பரிசாய் வாழ்வில் நமக்குக் கிடைத்த நல் ஒரே கனி
சற்றுநேரம் ஒரு கணந்தான்! சாற்றினேன் என் தோழியே.

இன்பத்தை நீ நாடித் தேடாய், இருப்பதெல்லாம் ஓர்கணம்;
மன்னன் வளவன், மல்லன் எவரும் மண்ணின் துகளாய்க் கண்டிட்டோம்.
பன்னலம்சேர் உலகில் காணும் மனம் படர்ந்த காட்சிகள்
மின்னல் இன்ப வாழ்வின் சாரம் மேவும் கனவு மாயையே.

கமழும் காலை மீனும் நிலவும் வானில் பூத்த நாள்முதல்
குமிழிட்டொளிரும் மதுவை அன்றிக் குறித்த மேன்மை கண்டதியார்?
இமைக்கும் ஒளி கொள் மதுவை விற்போர் என்னை வியப்பில் ஆழ்த்துவர்,
எமக்கு விற்கும் மதுவை விடவும் இனியதென்ன வாங்குவார்? 110

இருளின் சட்டைதனைக் கிழித்து நிலவின் கதிர்கள் தெறித்திடும்,
பருகுவாய் நீ மதுவை, வேறு பாங்கு மிக்க போழ்தில்லை;
பெருமகிழ்வில் திளைத்திருப்பாய், பிறங்கும் நிலவுப் பேரொளி
உறுதல் எங்கே? இருவர் நந்தம் கல்லறைகள் மட்டும்!

நாளைவரையில் பற்றுறன்றுரிமை எவர்க்கும் இல்லை ஆதலால்
வேளை இன்றே சோர்ந்த நெஞ்சில் உவப்பூடின்பம் விளைத்திடு,
பாளைவாயின் மது அருந்து பால்நிலாவில், பாங்கனே,
நீள நிலவும் நிலையாய்ச் சுழலும் நிலாது நமது வாழ்வடா!

இந்த ஆண்டின் வணிகர் சாத்தும் இமைப்பிற் கடந்து சென்றிடும்
இன்றே நீயும் இன்பப் பொழுதைப் பற்றிக் கொள்வாய் இளைஞனே,
துன்பம் ஏனோ? நண்பர்க்காக நாளைக் கவலை ஏனடா?
இன்ப மதுவின் கிண்ணம் கொள்க இரவும் விரைந்து கழியுமே.

வெளிரும் இருளின் காலைப் போதில் சேவல் கூவல் ஏனென
ஒளிவு தன்னை அறிகுவாயோ? உனது வாழ்வில் ஓர்இராக்
கழிந்துவிட்ட தென்றுகாட்டும் கண்ணாடிதான் உணர்கென
விழிப்புணர்வை விரித்துக் காட்டும், நீயோ கருத்தில் கொள்கிறாய்.

இன்இனிய பெண்அணங்கே, எழுந்திராய் விடிந்தது,
நின்று தாழ்ந்து மது உறிஞ்சு, யாழை மீட்டிப் பாடிடு;
என்றும் எந்த உயிரும் இந்த உலகில் நிலைப்பதில்லையே
சென்றுபோன மாந்தர் எவரும் திரும்ப வந்ததில்லையே. 115

நெஞ்சிற்கு இனிய மகிழ்வணங்கே, வைகறையில் எழுந்து நீ
கொஞ்சிப் பாடு, மனத்தைப் பற்றுக் கொண்டு வா செம் மதுவினை;
அஞ்சி இமயவரம்பன் படைகள் மண்ணின் துகளாய் மாறின;
விஞ்சும் கூதிர்காலம் செல்ல வேனிற் காலம் விரைகுதே!

காலைப் பொழுது, செம்மலர்த்தேன் மதுவைக் கனிந்து வார்த்திடு,
மேலைப் புகழைப் பெருமைப் பளிங்கைப் பாறை மீது நொறுக்கிடு,
பாலைக் கானல் நீரை ஒத்த கனவை முற்றும் விட்டொழி,
வாலைக் குமரி தன்னை நாடு, மகர யாழை மீட்டிடு.

வெப்பம் தட்பம் பொருந்தி நின்ற விருப்பமான இனிய நாள்,
மப்புப் பனியால் செம்மலர்சேர் மாசனைத்தும் நீங்கிடும்,
மட்டிலாது மதுவை உண்க என்று மஞ்சள் மலரிடம்
செப்பும் இனிய மொழியினாலே அல்லிசைப்புள் பாடிடும்.

புத்தாண்டின்பத் தென்றல் வந்து பூவின் கன்னம் வருடிடும்
புற்றரைக்கண் நெஞ்சில் நெருப் பேற்று முகம் நின்றதே!
செத்த நாள்கள் தம்மைப் பேசேல் சீரும் சிறப்பும் இல்லையே,
இற்றை நாளே இன்ப நாளாம், நேற்றைக் கதைகள் ஏனடா?

செம்மலர்கள் பூக்கும் பருவம் ஒடை ஓரம் செந்நீலம்
இன்பவான் அணங்கை ஒத்த இரண்டு மூன்று மங்கையீர்,
பொங்கும் காலை மதுக் கொணர்வீர், மதுவில் பொலியும் மாந்தர்கள்,
இங்குக் கோயில் எண்ணல் இல்லை, துறக்கம் அவருக்கில்லையே. 120

பூக்கள் புற்கள் புதுமைகொண்டு மகிழ்வில் பொலியும் இளைஞனே,
நோக்கி நுகர்க்க இன்பம் துய்ப்பாய், கிழமை ஒன்றில் நொடிந்திடும்,
பார்க்கும் போதே மலரைப் பறித்துக் கொள்நீ மதுவைப் பருகுவாய்,
பூக்கள் உதிரும் புற்கள் மறையும் புதுமைக்கே நீ முந்துவாய்.

புதிய ஆண்டின் குவளைப் பூப்போல் மதுவின் குவளை ஏந்துவாய்,
குதிகொள் வாய்ப்புக் கிடைக்குமாயின் குவளைக்கண்ணி மாதொடும்
மதுகையோடும் மது அருந்து, நீல வானக் கோள்களின்
விதிக்குட்பட்டு வீழ நேரும், வாழும் நாளை வெற்றிகொள்.

செங்கருமை நிறம்புனைந்து செழித்து மலர்கள் பூக்கையில்
செம்மலர்த்தேன் ஊடே தென்றல் சிந்து பாடிக் களிக்கையில்
அங்கம் பொங்கும் மங்கையோடும் அருமை மதுவை உண்டபின்,
கிண்ணம் நொறுங்கக் கல்மீது எறிவோன் உணர்வு தெளிந்த மாந்தனாம்.

கடந்த கால உலகக் கவலை விட்டு நீயும் எழுந்திடு
தொடர்ந்திருக்கும், ஒருகணத்தைக் களிப்பில் ஆழ்ந்து துய்த்திடு,
நடப்பியல்பில் உலகினுக்குப் பற்றின் சாயல் இருக்குமேல்
உனக்குன் முறையும் வருவதில்லை, பிறர்க்கு வந்த தொப்பவே.

ஆழங் காண முடியா உலகில் அகமகிழ்ந்து மதுவை உண்,
சூழ நின்று அருந்துவோர்க்குச் சுழன்று மாறும் மதுக்கலன்,
ஏலவாய்ப்புக் கிட்டும் போதில் முணுமுணுப்பும் எதற்கடா?
ஆழி போலக் கலயம் சுற்றும் அனைவர் தாமும் சுவைக்கவே.

கற்றறிந்தார் கூட்டத்திருந்து சுழற்றிக் கொள்ளல் நல்லது,
சிற்பம் ஒத்த மகளிர் கூந்தல் வலையில் சிக்கல் சிறப்புக் காண்,
கற்பிளக்கும் இளமைக் குருதி காய்ந்து வற்றிப்போகுமுன்,
பொற்கலத்து மதுவை உண்டு, பொலிந்திருத்தல் நல்லதாம்.

காலம் தந்த கவலை கொண்டு குந்தி இருக்கும் ஒருவர்க்குக்
கால நாள்கள் கசப்பைத் தந்து வெறுத்தொதுக்கித் தள்ளிடும்,
கோல வண்ணக் குவளை யாவும் குன்றில் மோதி நொறுங்குமுன்
சாலப் பாடும் யாழிற்கேற்பச் சலிப்பிலாமல் குடித்திடு.

வேனிற் பருவகால வரவும் கூதிர்ப் பருவப் பிரிவும் நம்
நானிலத்து வாழ்க்கை ஏட்டின் பக்கங்களைப் புரட்டிடும்,
வீணில் கண்ணீர் எதற்கு? விம்மும் மதுவை உண்பாய் அறிவரும்,
பூணும் துயரின் நஞ்சை மாற்றும் மருந்தாய் மதுவைப் புகன்றனர்.

உலகம் உன்றன் பெயரை மறந்தே ஒழிந்து அழிந்து போகுமுன்
கலப மதுவை உண்பாய் கனக்கும் நெஞ்சின் கவலை போக்கிடும்.
கலகலத்தே உன்றன் உடலும் கட்டிழந்து போகுமுன்
அலையலையாய்ச் சுருண்ட கூந்தல் அள்ளி அணங்கைத் தழுவுவாய்.

நாளைக் கவலை நமக்கு வேண்டா நண்பனே, நீ வந்திடு, இவ்
வேளைப் பொழுதை வாழ்வினுக்கு விருந்தாய் ஏற்றுக் கொண்டிரு,
நாளை என்று நாள் கழிப்பின் நாளையோடு ஏழாயிரம்
பாழில் ஆண்டில் கைதுறக்கப் பட்டவர்போல் ஆவமே. 130

கொள்கை அற்ற கோள்களின் கீழ் உள்ளாய் அமைதியாய் இரு,
தள்ளும் அழிவு நிறைந்த உலகில் உள்ளாய் மதுவை அருந்திடு,
உள்ள தோற்றம் இறுதி யாவும் ஒரு பிடிக்குள் மண்ணடா,
உள்ளாய் அல்லை, நிலத்தில் மீதில் மண்ணுக்குள்ளே வாழ்கிறாய்.

பொன்றி அழியுதென்றன் நெஞ்சம் பொங்கும் மதுவைக் கையில் தா,
கண்முன் மறையும் இந்த வாழ்க்கை, இதனின் தன்மை கொண்டதாம்
நன்னலஞ்சேர் இளமைத் தீயோ தண்ணீர் ஆகும் விழித்திரு,
பின்னர் பேற்றின் விழிப்பு நிலையோ பேசும் இறப்பாய் ஆகுமே.

மது அருந்து மது அருந்து இதுவே நிலைத்த வாழ்க்கையாம்;
இது உனக்கிங்கு இளமை தருவது அனைத்துப் பேறும் தந்திடும்;
மதுமலர்கள் நண்பர் கூடி மதுவருந்தக் காலமாம்
மது மகிழ்க, இந் நொடிதான் முழுதும் வாழ்க்கை ஆகுமாம்.

மதுவை உற்ற நேயனாக்கு, மன்னன் அதியன் நாடிதூ
புதுமை யாழின் இசையைக் கேள்நீ மன்னன் வழுதி பாடடிது,
இதுவரைக்கும் இருந்தொழித்த எண்ணிலாரை மறந்திடு,
மதுகையோடும் இன்று வாழ்வாய் மகிழ்ச்சி வாழ்வின் நோக்கிதே!

இன்றே உண்டு, நாளை உனது பிடிப்பில் இல்லை என்றறி,
நன்று என்று அதனை எண்ணில் உள்ளம் நலிவதுதான் மிஞ்சுமே.
உன்தன் உள்ளம் விழித்திருப்பின் உள்ள பொழுதை வீணிடேல்
இன்றை வாழ்க்கை நாளை தொடரும் என்று கண்டார் யாரடா? 135

மதுவும் மதுவை வழங்குவோனும் இன்றி உலகம் பொய்யடா,
மதி விரும்பும் கண்ணன் குழலின் பண்இன்றி வாழ்வேதடா?
பொதுவில் இந்த உலகை நோக்கின் பொருந்தும் விருந்துக் கூடத்தில்
மது அருந்தி வாழ்வதன்றி மற்றை யாவும் வெறுமையே.

உள்ளதோடும் இலாமை எண்ணி உளையும் நாள்கள் எத்தனை!
உள்ளம் மகிழ்வில் திளைக்கலாமா? எத்தனை நாள் இவ் வினா?
கள்ளை ஊற்றிக் கலம்நிரப்பு - உயிர்க்கும் மூச்சை மீண்டும் நான்
கொள்வதென்ன உறுதி அடடே மூச்சுக்கு உறுதி இல்லையே.

காதலிருவர் கைகள் சேர்த்துக் களிப்பில் ஒன்றிடாவிடில்
மோதும் களிப்பில் துயரை மிதித்து முன்னே செல்ல முடியுமா?
போது விடியுங் காலை வரைக்கும் புளகித்தின்பம் கொள்ளுவோம்
சாதல் நம்மைக் கொண்டபின்னும் தளிர்க்கும் காலை எண்ணில.

நிலைத்த இன்ப எல்லை தேடி நெடிய ஆசையால் மதுக்
கலத்தின் இதழில் இதழ்பொருத்திக் காயகற்பம் தேடையில்
மெல்லவே தன் இதழை இதழில் இணைத்துச் சொன்ன சொல்இது!
"களித்துண் மதுவை! மீண்டும் இங்குக் கால் நீ வைப்பதில்லையே."

அன்புத் தோழ, மது அருந்தி அளப்பில் மகிழ்வில் மூழ்குவாய்,
இன்மலர் முகத்தினாளை இறுகணைத்து மகிழுவாய்,
இந் நிலத்தின் முடிவில் ஏதும் நிலைத்திருப்ப தில்லையே,
பின் எதற்குப் பேச்சாம்? இன்பப் பேறனைத்தும் துய்த்திடு.

போலி நடிப்பு யாவும் நாளைப் புறம்இழுத்து விலக்குவேன்,
கோல நரைகொள் மூப்பை முற்றும் கொழிக்கும் மதுவில் கழிப்பன் நான்
சால எழுபதாண்டை எட்டித் தழவி நிற்கும் என்உயிர்
ஏல இப்போதின்றேல் இன்பம் எப்போது எனக்கு வாய்க்குமோ?

உலகக் கோளம் நமதெலும்பின் பந்து போன்ற உருவமே,
சலசலக்கும் பொன்னி ஆறு நமது கண்ணீர் நிரம்பிடும்,
அலக்கழிக்கும் துயர் நெருப்பின் ஒரு பொறியே நிலையமாம்;
விலகி நுகரும் ஒருகணந்தான் வீறு மிக்க துறக்கமாம்.

தன்னலத்தின் நாட்டத்தில் நீ எத்துணை நாள் வாழ்குவாய்!
இன்மை தேடி உண்மை தேடி எத்துணை நாள் ஓடுவாய்!
துன்பம் தொடரும் வாழ்வை என்றும் களிப்பில் தோய்க்க வேண்டுமேல்
இன்ப மது, உறக்கம் இரண்டில் ஒன்றில் மூழ்கி மகிழுவாய்.

என்றன் அன்பே, எழுந்திராய் நீ எழிலால் துயரைத் தீர்த்திடாய்,
நம்மின் உள்ளம் தெளிவு கொள்ள நறவின் குடத்தை ஏந்திவா,
நம்மின் மண்ணால் மதுக்குடந்தான் நாளைவனையப் போகுமுன்
ஒன்றிணைந்து மது அருந்தி உலக இன்பம் துய்ப்பமே.

குரானின் கூற்றே இறுதிக் கூற்றென்றவர்கள் சொல்லிக் கொள்கிறார்,
இராவும் பகலும் அல்ல அதனை எப்போதோதான் ஒதுவார்,
பராவும் மதுவின் கிண்ண விளிம்பில் பதித் தவரிகள் தம்மையோ
பராவி என்றும் எவ்விடத்தும் பருகுவார் செம் மதுவினை.

மது அருந்தல் இல்லையேனும் மது உண்போரைக் கடிந்திடேல்!
மது அருந்துவோரை மீட்க மாய வலைகள் வீசிடல்
மது அருந்த மாட்டேன் என்று மார்பு தட்ட வேண்டுமா?
மதுவோர் கூறு தானடா நீ மீண்டும் தீனிப் பெருக்கிலே.

சிதலமான மூலையில் நாம் மதுவும் இசையும் சேர்ந்துளோம்,
மதுவின் மண்டி நெஞ்சம் உள்ளம் துணிகள் யாவும் கறைபடும்
கடவுள் அருட்கோ தண்டனைக்கோ கவலை சிறிதும் இல்லையே
மதிக்கும் மண் விண் நெருப்பு நீரின் கட்டிருந்து விடுபட்டோம்.

உனது மகிழ்ச்சி மலரும் இன்றே உரிய விளைவைத் தந்தது,
உனது கையேன் மதுவின் கிண்ண உறவில் ஒங்கவில்லையே?
மனதுக்கேற்ற மதுவருந்து காலம் கேள்போல் கொடும்பகை,
இனி வராதே இத்தகை நாள், இன்புற்று அருந்து மதுவினை.

ஆன்மிகத்தின் உலகிருந்து விரைந்து நீயும் வந்துளாய்,
நான்கு பூதம் ஐம்புலன்கள் ஆறறிவினாலும் மற்று
ஏழு கோள்கள் தம்மால் நீயும் இடைத் தடங்கல் எய்தியே
ஏன் இங்குற்றோம், எங்கிருந்து வந்தோம் என்றும் அறிகிலாய்
மீண்டும் எங்கே செல்வோம் அறியாய் மதுவில் களித்து ழுழ்கிடு.

நெஞ்சமே உன் கடக்கும் காலம் கலைக்குள்ளே ஆழ்த்தலால்
பஞ்சபூதத் தோடுன் ஆவி பறந்தொழிந்து செல்வதால்
உன்றன் உடல் மண்ணின் மீது பசும்புல் தோன்றி ஒங்குமுன்
கொஞ்ச நாள் இப் பசும்புல் மீது குந்தி மதுவில் மகிழுவாய். 150

மது அருந்தும் கூலியாளின் மதுக்குடந்தான் மன்னனின்
பதுங்கும் கண்கள் அமைச்சன் நெஞ்சாங்குலையில் செய்த பண்டமாய்
மதுவில் மகிழும் குடியன் கையில் தவழும் மதுவின் கிண்ணமோ
மதுவில் சிவந்த மங்கை கன்னம் இதழ்களாலும் ஆனதே.

ஓடைப் புனல்போல் பாலை மீதில் ஒங்கும் புயலைப் போலவே
பீடையான வாழ்வின் கடின நாள்கள் தாமும் ஓடின,
ஊடு நெஞ்சில் கவலை கொள்ளா நாள்கள் இரண்டு தாமுள;
ஓடிப்போன "நேற்று"ஒன்று "மறுநாள்"மற்றது ஆகுமே.

நீயும் நானும் தோன்று முன்னே, இரவும் பகலும் இருந்தன;
ஒய்விலாத வானக் கோள்கள் உருண்டும் திரிந்தும் ஓடின;
தேயும் உன்றன் கால்கள் மண்ணின் முகத்தைத் தொட்ட இடத்திலே
பாயும் அன்புக் காதல் ஒருத்தி கண்ணின் மலர்கள் இருந்தன.

உனது சூழல் ஒத்திருக்கும் போதே மகிழ்வில் ஒங்குவாய்,
உனது விதி நீ தேர்ந்ததில்லை, அறிஞரோடும் ஒத்திரு,
உனதுடம்பின் கூறனைத்தும் மண்ணும் காற்றும் கலந்தவை,
கனமிலாத துரும்பும் மூச்சுக் காற்றம் உன்றன் உடலமே.

களிப்பில் திகழும் அல்லிசைப்புள் காவில் நுழைந்து செம்மலர்
ஒளிச்சிரிப்பும், மதுவின் கிண்ண உவகைதனையும் கண்டது;
கிளர்ச்சி ஊட்டும் ஆவலோடு கிசுகிசுத்த என்னிடம்
"ஒளிவில் வாழ்வில் ஊறித் திளைநீ ஒடும் வாழ்க்கை மீண்டிடா!" 155

உண்மையோடே உறுதிப்பாடும் உலகில் சற்றும் இல்லையால்,
உண்மை தேடி ஐயத்தோடும் உழலல் என்ன வாழ்வடா?
கிண்ண மதுவைத் தவிர்த்திடாமல் விழிப்புக் கொள்வாய் மாந்தனே.
உண்ணில் என்ன, தவிர்க்கில் என்ன? மாந்தன் என்றும்பேதையே!

ஒவ்வோர் முட்டாள் காலடிக்கீழ் உள்ள துகள்கள் யாவுமே
கவ்வும் காதற் பெண்ணின் கையாய்க், கன்னமாய் முன் இருந்தன;
ஒவ்வும் வெற்றி வளைவின் செங்கல் அமைச்சர் விரலாகவோ
இவ் இடத்தை ஆண்ட மன்னன் தலை எனவோ இருந்ததே!

மறைவு செய்யும் திரையின் ஊடு வழியை எவரும் கண்டிலர்,
நிறைந்த இயற்கை வாழ்வின் சுமுக்க நிலைமை யாரும் கண்டிலர்,
இறந்த பின்னர் மண்ணிலன்றி எங்குவேறு புகலிடம்?
நிறைவிலாத கதை இதாகும் நெஞ்சம் மகிழக் குடித்திடு.

உறங்கலானேன் அறிஞன் ஒருவன் என்னிடத்தில் உரைத்தனன்:
உறங்கினோர்க்கு மகிழ்வின் மலர்கள் உகப்பளித்தல் இல்லையே,
உறங்கல் தானும் சாக்காடாகும், ஏன் உறங்கிச் சாகிறாய்?
கிறங்கும் மதுவை உண்டு மகிழ்வாய், மண்கீழ் உறங்கல் உறுதியே.

இன்ப வேனிற் காலை நெஞ்சிற்கு இனிய அணங்கு போல்மகள்
நன்செய் ஓரம் நின்று கொண்டு நயந்து மதுவை ஈவளேல்
இந்தச் செய்கை தகுதிக்கேடாம் அன்பர் இழிஞர்; ஆயினும்
இன்பத் துறக்கம் வேறு தேடின் இழிந்த நாயின் கடையன் நான்.

உயிர்ப்பிருந்து பிரிந்து போதல் உலகில் என்றும் உறுதியே,
உயிர்க்கும் வாழ்வின் புதிர்த்திரையின் உட்புறம் நீ மறைகுவாய்,
அமிலுவாய் நீ மதுவை; வந்தது எங்கிருந்தோ? அறிகிலாய்
மகிழுவாய் நீ செல்வ தெங்கே என்ற புதிரும் அறிகிலாய்.

இருண்மை சூழ்ந்த வாழ்விலே நான் வாழ்கிறேன் என் செய்கைகள்
மருண்மை குழப்பம் அழிவும் அதிகம் மனத்தில் அமைதி குறைந்தது,
பெருமைக்குரிய கடவுள்தான் இப் பேதுக்கெல்லாம் காரணம்
அருமை நன்றி அவருக்காக, அவரே விடையைச் சொல்லட்டும்.

புலன்கள் ஐந்தும் உனது வாழ்வின் நிலைப்பை உறுதிப்படுத்தினும்
நலன்கொள் உன்றன் உடம்பில் உயிர்நய மிகுந்த ஆடையாம்,
வலன்கொள் காப்பின் இடமாய் இருக்கும் உடலம் என்னும் குடிலினில்
பலம் இலாத நான்கு முளைகள் பற்றில் இல்லை உறுதியே.

மது செம் மணியின் நீர்மம், சேமக் கலயம் மண்ணின் சுரங்கமாம்,
இது நம் உடலம், ஏந்தும் கிண்ணம், இன்னுயிர்ப்பே செம்மது;
மதுவினோடு சிரிக்கும் அந்தப் பளிங்குக் கிண்ணம், நெஞ்சத்தின்
உதிரம் உள்ளே மறைந்திருக்க ஒழுகும் கண்ணீர் ஆகுமே.

செம்பரத்தை மலர்கள் செழித்துப் பள்ளத்தாக்கில் சிலிர்ப்பவை,
இந் நிலத்தை ஆண்ட மன்னர் குருதியால் சிவந்தவை,
மின்னி ஒளிரும் குவளை மலர்கள் மண்ணில் செழித்தவை எலாம்
அன்பில் காதற் பெண்ணின் அழுகுக் கன்னக் கதுப்பின் மச்சமாம்.

அதியன் அஞ்சி அரசின் மேலாம் ஒரு மடக்கு மதுச்சுவை,
உதியஞ் சேரல் அரசுகட்டில் மிக்கதாகும் ஒருதுளி,
நடிக்கும் வேடதாரி, இறைமுன் பாடும் தொழுகை மேலதாம்
விடியற் போதில் உதவாக்கரையின் நெட்டுயிர்ப்பின் ஏங்கொலி.

நேர்ச்சி என்னும் களத்தினிலே ஆடப்பட்ட ஒன்றது,
ஆட்ட விதிகள் வரைந்த நாளில் அங்கிருந்தது இல்லையே,
சாக்குச் சொல்லல் போல இன்றுதான் இடைக்கண் வந்தது
மீட்டும் நாளை யாவும் மாறிப் பழைமை போல நிற்குமே.

வளர்ந்து முதிர்ந்த மூத்தரோடு வாழும் இளைஞர் தாமுமே
உளம்கொள் போக்கில் அவர் அவர்தம் நோக்கில் விரைந்தே ஓடுவர்
தளர்ந்துபோன பழைய உலகம் யார்க்கும் நிலைபேறல்லவே
அவர்கள் சென்றோர், நாமும் செல்வோம், அடுத்தும் வருவார் செல்வரே.

ஒருவன் இங்குத் திணிக்கப்படுவான், ஒருவன் எறியப்படுகிறான்,
ஒருவருக்கும் வாழ்வின் கமுக்கம் உணருமாறு இங்கில்லையே,
உருவெடுக்கும் ஊழ்வினை நமக்களித்த வாழ்வெலாம்
குறுகலான, நிலையிலாத புன்மை வாழ்க்கை தானடா.

இன்னல் ஏற்கும் மாந்தர் தம்மை ஏற்றம் செய்து உயர்த்திடும்,
விண்ணீர் சிப்பிச் சிறையிலுற்று விளைந்து முத்தாய் ஆனதாம்,
மண் நலங்கள் அழிந்த போதும் மனத்தைக் கிண்ணி ஆக்கிடு,
கிண்ணி வெறுமை ஆகும் போதில் மீண்டும் நிரப்பப்பட்டிடும். 170

கழிபேரின்பம் தேடும் உனது கட்டிலாத அறிவுதான்
எழுந்தெழுந்து மீண்டும் மீண்டும் இந்த ஒன்றை இயம்பிடும்:
நழுவிடாமல் கிடைத்த வாழ்வும் பொழுதை நன்கு பற்றிக்கொள்
கொழுந்தைக் கிள்ள வெட்டத் தளிர்க்கும் குணங்கொள் கொடி அஃதல்லவே.

காலம் எனது முதுகை வளைக்கச் செயல்கள் யாவும் சிதைந்தன,
கோல வாழ்க்கை என்னை விட்டுச் செல்ல அணிய மானதே.
ஏல என்னை நீங்கிடாதே என்றேன், சொன்ன விடையிது:
வேறே என்ன செய்ய முடியும் வீடிடிந்து வீழ்கையில்?

வண்ணின் கோள்கள் சுழற்சி பற்றி விரிந்தறிந்தார் இல்லையே,
மண்ணும் மாந்தர் தம்மைத் தின்றும் மனத்தில் நிறைவு பெறவில்லை,
இன்னும் உன்னைத் தின்னவில்லை என்று பெருமை கொண்டிடேல்,
ஒன்றும் விரைந்து பேச வேண்டா; உன்னை நாளை உண்ணலாம்.

நானிலாமல் எனது வாழ்வை எழுத விதிக்கோல் முனைந்தது,
ஏன் அதன்தன் நன்மை தீமை என்றன் மீது சுமந்திடும்?
நான் இலாமல் நேற்றும் இன்றும் விதியும் தானே எழுதிற்று
நாளை முறை மன்றில் என்னை நிறுத்தச் சான்றும் ஏதடா?

வண்ணம் மணத்தில் கவர்ச்சி கொண்டே எத்தனை நாள் வாழ்குவான்?
கண்கொள் வனப்பில் அருவருப்பில் காக்கும் காலம் எத்தனை?
மண்ணகத்தில் புனிதநீராய், உயிரின்ஊற்றாய் நிற்பினும்
மண்ணுக்கடியில் ஒருநாள் நீயும் ஆழ்தமிழ்ந்து போவையே. 175

கொடிய வறுமைப் பாதையன்றிக் கொள்ளல் ஏதும் இல்லையே
வடியும் குருதிக் கண்ணீர் கன்னம் கழுவிலன்றிப் பயனிலை,
துடிக்கும் ஆர்வம் கொளுத்தல் ஏன்? தமைத்துறந்த தூயர்போல்
ஒடித்துத் தன்னலத்தை தள்ளல் இன்றேல் ஒன்றும் உற்றிடா.

மண்டை ஓட்டை, முகங்கள் தம்மைப் படைக்கும் ஆற்றற் பேரிறை
கண்டவாறு தமது பணியில் என்றும் தவறு செய்கிறார்.
மண்டும் மதுவின் குடத்தை வனைவோன் நல்ல மாந்தன் இல்லையாம்
என்னில், இந்தச் சுரக்குடுக்கை படைத்தோனை என் என்பதாம்?

புத்தம் புதிய செம்மலர்கள் உலகில் பூத்து மணக்கையில்
முத்தம் ஈந்தென் அன்பே மதுவை முழுதும் வார்க்க ஏவிடு,
பித்தர் சொற்கள், வானணங்கள் விண்கொள் மாடமாளிகை
முற்றும், துறக்கம் நிரையம் யாவும் முழுமை இல்லை உளறல்கள்.

இந்த உலகில் உள்ள எவர்க்கும் உண்ணப் பாதி அப்பமும்
குந்தி வாழக் குடியிருக்க வீடும் ஒன்று கொண்டவர்,
இங்கு யார்க்கும் ஆண்டை அல்லர், அடிமையரும் அல்லரே
"என்றும் மகிழ்க"என்றவர்க்குச் சொல்க இன்ப வாழ்க்கையே.

ஊழின் உழவன் நமை விதைப்பன் வளர்ப்பன், அறுப்பன் ஒய்விலான்
ஊழிற்காக வருந்துதல் வீண் ஆக்கம் ஏதும் இல்லையே
வாழ்த்தி மதுவை வார்ப்பாய் விரைவாய் வாகாய்க் கையில் கொடுத்திடு
மூழ்குவேன் நான் மீண்டும் உலகில் வருபவைமுன் வந்தவை. 180

காலம் உன்னை வழிமறித்துக் கல்லறைக்குள் கொள்ளுமுன்,
கோலம் சிவந்த மதுவைக் கொணரச் செய்து வாங்கிக் குடித்திடு,
ஏல மண்ணில் புதைத்து வைத்து மீண்டும் எடுத்துக் காத்திட
ஆன செம்பொன் கட்டி அல்லை மதியிலீ நீ அறிகுவாய்.

இறப்பின் கொடுமைப் புதிரை இதுநாள் வரைக்கும் எவரும் அவிழ்ந்திலர்,
பிறப்பின் நாளில் குறித்த எல்லை, பெயர்ந்தோர் அடியும் வைத்திலர்,
அறிவு கொள்வோன் அறிஞன் முதலாய் அனைவரையும் அளந்துளேன்
பிறந்து பெண்ணின் மடிவளர்ந்தோர் பேதைமை கைக் கொண்டனர்.

நானிலத்தில் வரவு நோக்கேல் இருப்பதைக் கொண்டின்புறு,
காலம் கொணரும் நன்மை தீமை கருத்தில் கொள்ளேல் புறக்கணி,
ஏன மதுவைக் கையில் கொள்க இனிய மகளைத் தழுவுவாய்
ஆன இவைதாம் விரைவில் கழியும், அடுத்த நாள்கள் மீண்டிடா.

என்றன் கவலை, இடுக்கண் யாவும் இடைவிடாத நெடுங்கதை;
உன்றன் இளமை இனிமை யாவும் ஒங்கி அவற்றின் மேல்வாம்.
ஒன்றின் பின்னும் சார்ந்திடாதே ஒன்றையும் நீ நம்பிடேல்
விண்திரைப் பின் காட்சி கோடி விரிந்து பரந்திங் குள்ளதே.

மண்ணில் மீண்டும் கசக்கி எறியும் எண்ணங் கொண்ட விண்ணகம்,
மண்ணில் கோடி மலர்கள் தம்மை மலரச் செய்யும் நாள்தோறும்;
தண்ணீர் உறுஞ்சல்போல் முகில்கள் மண்ணை வாரிச் செல்லுமேல்
விண்ணின் தாரை விரும்பினோரின் குருதிவெள்ளம் பொழியுமே. 185

வாய்ப்பு நேரம் வாழ்வில் சிறிய நொடிப்பொழுதே ஆயினும்
தோய்ந்து மகிழ்வில் திளைத்துக் களிப்பினோடு கடந்து செல்லட்டும்
ஆய்ந்து வைய வாழ்வின் வணிக அங்காடியில் பெற்றது,
போந்த வாழ்வுதானே அதனைப் போற்றிக் காத்து வைத்திடு.

அவர்கள் சொல்வர், வேட்கை மறுப்பும் பயின்றோர் உலகில் யாவரும்
அவலமற்றுச் செத்த பின்னர் உயிர்த்தெழுந்து விடுவராம்
உவந்து நாமும் புத்துயிர்க்கு மதுவும் மங்கையொரொடும்
கவலை அற்றுக் களித்திருக்கும் கலைகள் பேணிப் பயிலுவோம்.

மது அருந்து, மண்டி நிற்கும் மாடனைத்தும் போக்கிடும்,
இதுவதென்னும் எழுபத்திரண்டு கருத்து முரணைத் தீர்த்திடும்,
மது அருந்து விலக்கிடாதே, மடுக்கும் ஒருவாய் மதுவினால்
சிதைக்கும் நோய்கள் பத்து நூறும் தீர்த்து மகிழ்வைத் தந்திடும்.

நெருப்பில் பாய்ந்தும் புத்துயிர்கொள் நிகரில்லாத பறவைபோல்
அருமறைப்பில் நெஞ்சத்தறிவின் கழுக்கம் அனைத்தும் காத்திடு,
பெருங் கடற்கண் அழச் சிப்பி பேணி மழைநீர் மறைத்ததால்
அருமை வாய்ந்த பெருமைக்குரிய அழகு முத்தாய் ஆனதே.

இன்மணத்தேன் மலர்முகத்தைப் பனியின் துளிகள் கழுவையில்
செந்நீல மலர்கள் பசம்புல் வெளியில் ஒடிந்து வீழ்ந்திடும்;
முந்தித் தலையை நிமிர்த்தி நிற்கும் முகைகள் தம்மை விரும்புவேன்,
இன்னும் அவற்றின் இடையின் ஆடை கசங்கவில்லை என்பதால். 190

என்றன் மனது கல்வி அறிவை என்றும் இழந்ததில்லையே,
இன்னும் எனக்கு விளங்கிடாத மறைபுதிர்கள் இல்லையே
பன்னும் எழுபதாண்டு வாழ்வைப் பகலும் இரவும் எண்ணினேன்
என்ன கற்றேன? கற்கப்பட்டன எவையும் இல்லை என்பதே.



ஏயும் ஆசை வித்தும் ஒன்று களத்து மேட்டில் இருந்திடும்
நீயும் நானும் சென்ற பின்னர் நிற்கும் தோட்டம் அரண்மனை,
வாய்த்த பொன்னைச் செப்புக்காசை நண்பர்க்கு அனைத்தும் வழங்கிடு
ஈயும் இன்பம் அற்றுப்போனால் பகைவர் கொள்வர் அப்பணம்.

நூறு நெஞ்சம், சமயம் நிகர்க்கும் ஒற்றைக் கிண்ண மதுவடா,
வீறு மிக்க ஒரு மடக்குக் கிணையாம் சீன ஆள்நிலம்
நூறு நூறு நெஞ்சங்களுக்கு ஒப்ப இந்த உலகினில்
வேறு எந்தப் பொருளுமில்லை சிவந்த ஏமதுவை அன்றியே.

ஒரு துண்டப்பம் வீறல் விழுந்த பானையில் ஓர் துளித்தண்ணீர்
ஒருவனுக்காய் இரண்டு நாட்குக் கிடைக்குமாயின் வெட்கமே!
ஒருவன் நீ ஏன் உன்னின் தாழ்ந்தார் உனக்கு நிகராய் உள்ளவர்
இருவருக்கும் ஊழியம் நீ ஏன் புரிதல் வேண்டுமே?

சிவந்த மதுவை எளிய பளிங்குக் குவளையில் நீ கொண்டு வா,
உவப்பளிக்கும் தோழியோடு நண்பனையும் அழைத்து வா,
தவழ்ந்திடாமல் உலகில் நாள்கள் காற்றைப் போல விரைவதால்
இவணிருக்கும் வரையில் இன்பம் எய்த மதுவைக் கொண்டு வா. 195

நண்பனே, இறைமை பற்றி என்ன உனக்கு வேலையே?
எண்ணும் நெஞ்சம் ஆவிபற்றி ஏனோ பூசல் கருத்தினால்?
மண்ணுலகத்தை மகிழ வைத்துக் களிப்பினோடு வாழ்ந்திடு,
உன்னை மனத்தில் கொண்டிங்கு உலகில் ஒன்றும் தொடங்கவில்லையே.

பாழாய்ப்போன உலகைக் குறித்துக் கவலை கொள்ளேல் நெஞ்சமே,
மேலாம் நோக்கம் கொண்டுளாய் நீ வேண்டாத் துயரம் கொண்டிடேல்,
போனதென்ன, இருப்பதென்ன புரியவில்லை; களித்திரு,
ஆனதென்ன, ஆவதென்ன அறிதற்கில்லை மகிழ்ந்திரு.

உலகின் சூழ்ச்சி வழிகள் எல்லாம் வெல்லப்பட்டது அறிகுவாய்,
நலமிகுந்த இன்பத் தோட்டம் பசுமை வண்ணம் பூண்டது
மலரும் புல்லின் நுனிசேர் பனிபோல் மகிழ்வாய் இரவில் தங்கிடு,
புலரும் பொழுதும் போந்ததிங்கே புத்துணர்வில் பூத்திடு.

இறந்த பேர்கள் இந் நிலத்தில் மண்ணுயித் தூசாய் மாறினார்,
சிறி துணுக்கும் உறவிலாமல் தனித்துச் சிதறிப் போனது,
இறக்கும் வரையில் ஏந்தி உண்ட மதுவின் வகைகன் என்னவோ?
மறந்தெழிந்து போன அவரின் மதியும் உணர்வும் மண்ணிலே.

மதுவின் கலய மூடி மாறன் அரசினும் இன்பளிப்பது,
மதுவின் மணமோ மணிமேகலையின் அமுதசுரபிக் கொத்தது;
விடியும்காலைப் பொழுதில் குடியன் விடும் கொட்டாவி அவ்வையார்
அதியமானின் இறப்பின்காலை அழுத பாட்டின் உயர்ந்தது. 200

மது அருந்து மண்ணில் நிலைத்த வாழ்வுக்குரிய பேறது,
புதுமையான இளைமை இவைப் பெருக்கின் மூல ஊற்றது,
அது நெருப்பாய் மாறும், துயர்க்கு முற்றுப்புள்ளி வைத்திடும்,
மது அருந்து வாழ்க்கைக் குற்ற வற்றிடாத நீரது.

குடிப்பதாயின் அறிவறிந்த மக்களோடு குடித்திடு,
கொடிமலர்ப்பூங் கன்னப் பெண்கள் கூட இருந்து குடித்திடு,
அடிக்கடி நீ குடித்திடாதே அதிகம் வேண்டா, அடங்கிடு,
குடிப்பாய் அளவாய், இடை நிகழ்வாய்த் தனித்திருந்து குடித்திடு.

இளைஞனே நீ எழுவாய், பொழுது விடிந்து காலை ஒளிர்ந்தது,
பளிங்குக் கிண்ணம் நிறையச் சிவந்த மதுவை ஊற்றி மகிழ்ந்திடு
நெளிந்து நெகிழ்ந்து விரையும் நிலையிலாத இடத்தில் இக்கணம்
பொழுதை நீண்ட நாளாய்த் தேடினாலும் காணல் இல்லையே.

கரிய மண்கொள் உலகம் முதலாய்க் காரிக் கோள்கள் வரையிலும்
உரிய இந்த வையத்துள்ள சிக்கல் யாவும் தீர்த்துளேன்
அரிய இந்தச் சிக்கல் முடிச்சை வகை வகையாய் அவிழ்த்துளேன்,
தெரிந்தவிழ்த்தேன் ஒவ்வொன்றையும்; இறப்பின் முடிச்சில் திகைக்கிறேன்.

செம்மலர்ச்சீர் காட்டிற் சிறந்த தேக்கு மரங்கள் ஊடு நீ
செம்மணித்தேன் மதுவை மங்கை சேர்த்த கையை நெகிழ்த்திடேல்,
அம்ம, காற்றால் உதிரும் மலர்போல் அழிவிறப்பும் போர்ப்புயல்
எந்தக் கணமும் நமை உதிரிக்கும். இன்பவாழ்வை விட்டிடேல். 205

காலன்வந்து கொடிய நஞ்சைக் கையில் கொடுக்கும் முன்னரே
ஆலும் துயிலை விட்டெழுவாய், மதுவை மீண்டும் அருந்தவே
காலம் என்னும் செருக்கு மிக்க கொடிய உருளைத் திருப்பங்கள்
ஞால மீதில் நம்மை ஒருவாய் நீரும் அருந்த விட்டிடா.

புத்துணர்ச்சி போல எழுவேன் பொலியும் மதுப்பால் செல்லுவேன்,
அத்திப்பழமாய்க் கன்னம் சிவக்க அருந்துவேன் நான் இன்மது,
கைத் தலத்திதில் மதுவை ஏந்திக் கனவில் செய்வ தொத்து நான்
எத்தனைத் துறைக்கும் அறிவின் உரையின் முகத்தில் அறைகுவேன்.

உழைப்பின் சிறையில் கைதியாக எத்தனை நாள் வாழ்வது?
தழைக்கும் ஒரு நூறாண்டு வாழ்வும் ஒருநாள் வாழ்வும் ஒன்றுதான்
குழைத்து மண்ணாய்க் குயவன் நம்மை மதுவின் குடமாய் மாற்றுமுன்
தழைக்கும் மதுவைக் கிண்ணத்தூற்று, தலைநிமிர்ந்து வாழுவோம்.

ஒருகல் தொலைவு நீளும் ஒன்றை ஒளித்துவைக்க முடியுமா?
பெருகும் காலப் புதிர்கள் தம்மைச் சொல்லும் ஆற்றல் பெற்றிலேன்;
கருத்துக் கடலில் அறிவுகொண்டு முத்தெடுத்து வைத்துளேன்,
பொருத்தமாக இழையில் அதனைக் கோத்தளிக்க அஞ்சுவேன்.

என்றன் பகைவன் அறிவன் என்றே என்னைத் தவறாய் இயம்புவன்.
அன்னவன்சொல் உண்மை இல்லை, என்பதறிவான் ஆண்டவன்.
துன்ப உலகின் இருப்பிடத்தில் துவண்டு நானிங்கு இருப்பதால்
என்னை யாரென்று அறியும் திறமை இல்லேன் நான் ஓர் எளியனே. 210

இன்ப ஊற்று, துன்பக்கேணிக்கான முதன்மை நாமடா,
நன்மை தீமைச் சேம வைப்பும் அடிக்கல் நாட்டல் நாமடா,
துன்னும் உயர்வும் தாழ்வும் பெற்று நிறையும் குறையும் உள்ள நாம்
கொன்னல்ஆடி; முன்றுகாலம் அறிபூங்குன்றன் கன்னலோ?

எளியன் என்றோ கிடைக்கவில்லை என்பதாலோ மதுவினைப்
பழிப்பவர்தம் சொல்லுக்கஞ்சிப் பருகிடாமல் இருந்திடேன்,
களிப்பதற்கே என்பதன்றிச் சுமையற்றிருக்கக் குடிக்கிறேன்;
எழிலன் செல்வீ, நெஞ்சில் உற்றாய் இனி நான் மதுவை அருந்திடேன்.

'நான்தான்' என்றுசொல்லிக் கொண்டேஅவ்வப் போதுவருகிறான்,
நான்தான் என்று தங்கத்தோடும் வெள்ளியோடும் வருகிறான்,
ஏன்ற அவன்தான் அற்றை நாளின் அலுவல் வரையறுக்கையில்
'நான்தான்' என்று மறைந்திருந்த இறப்புத் தாவிக் குதித்திடும்.

வையகத்தின் பிணைப்றுந்தே ஒருவாள்கூட வாழ்ந்திலேன்,
வையவாழ்வில் ஒரு கணத்தும் மகிழ்வில் ஆழ்ந்து வாழ்ந்திலேன்
கையகப்படுத்தும் காலன் கையாளாக வாழ்ந்துளேன்
ஐய இன்னும் உலகின் நுட்பம் அறிந்து கொண்டேன் இல்லையே.

கடந்தகாலம் இறந்த ஒன்று கருதி அதனில் வாழ்ந்திடேல்
நடக்கப்போகும் "நாளை" அதனை நம்பி ஏங்கி நின்றிடேல்
நடந்தகாலம் வரும் ஓர்காலம் நோக்கி எதையும் கட்டிடேல்
நடக்கும்நாளில் மகிழ்வு கொள்வாய், கற்பனைக்குள் வாழ்ந்திடேல். 215

கண்ணே, ஒளியிழந்தாயில்லை, கல்லறையைக் கண்டிரு,
என்னே இந்த வெறுப்பும் கசப்பும் நிறைந்த உலகைக்கண்டிரு,
மண்ணாள் மன்னர், அமைச்சர், இளங்கோ மண்ணுக்கு அடியில்புதைந்தனர்,
வெண்ணிலா முகங்கள் மண்ணில் சிதல் அரிக்கக் கண்டிடாய்!

சாகும்வரை இச் சதுப்பு நிறைந்த உப்புமண்ணில் மாந்தனே-
ஆகப்பெற்ற அனைத்தும் அந்தோ அளவிலாத துன்பமே
வேகமாய் இம் மண்ணைவிட்டோர் தாமே பேறு பெற்றவர்
ஆக இன்னும் பிறவார் தாமே அமைதியில் திளைப்பரே!

தங்கு மனையாம் இந்தஉலகில் வெற்றுக் காற்றே உள்ளதாம்
இங்கு முறைமை இல்லை அறமும் இல்லை எனலாம் செல்கிறேன்,
பங்கு கொள்ளும் இறப்பிருந்து தப்பினோர்கள் மட்டுமே
இங்கென் இறப்பில் ஒன்றிணைந்து களிப்பில் மூழ்கித் திளைப்பரே.

இல்லா விருந்தில் அழையா ஆளாய் அங்கிருப்பதைவிட
உள்ள எலும்புத் துண்டில் நிறைவு கொள்ளும் கழுகாய் வாழலாம்
இல்லாதார் செய் சுவை விருந்துக் கேங்கலின், உன் சொந்தமாய்க்
கொள்ளும் பழஞ் சோற்றை உண்டு நிறைவுகாணல் உயர்ந்ததாம்.

மதங்கள் காட்டும் வழியில் ஒருவன் மனத்தைச் செலுத்தி ஆய்கிறான்,
புதிர்களுக்குள் ஒருவன் நிலைத்த தன்மை புகுந்து காண்கிறான்,
"இதுவும் இல்லை அதுவும் இல்லை முட்டாளே கேள்"எனச்
செதுக்கும் மொழிதான் செவியில் வீழும் நாள்கள்தொலைவில் இல்லையே. 220

காலத்தூதர் வெட்டிப் பேச்சைக் காதில்வாங்கிக் கொண்டிடேல்,
கோலமாதர் குடத்தின் மதுவைக் கொணர்ந்து வார்க்கக் கூப்பிடு,
காலங்காலமாக வந்தோர் கடந்து தொடர்ந்து மாய்ந்தனர்,
ஞால மீதில் திரும்பிவந்தோர் எவரையும்நாம் கண்டிலோம்.

துறவிக்கோலம் பூண்டு பொய்மை வாழ்க்கை நடத்தல் தன்னினும்
நறவருந்தி நண்பரோடு மகிழ்ந்திருத்தல் மேலதே.
உறவில் மகிழும் காதலர்கள், குடியர் தீயர் என்பமேல்
துறக்கநாட்டை எவரும் காணார் துறக்கம் வெறுமை ஆகுமே.

களிப்பு மிக்க நெஞ்சகத்தைக் கவலையாலே தளர்த்திடேல்,
களிப்பும் பருவக் கனிகள் தம்மை இன்னல் கல்லால் தாக்கிடேல்,
ஒளிந்திருக்கும் எதிர்காலத்தை எவரும் அறியார் - ஆசைகொள்,
தெளிவைக் காதற் பெண்ணை மற்றும் தேவை யாவும் நுகர்ந்திடு.

கள்ளைத் தவிர மற்றவற்றைக் காமுறாடை சிறந்தது,
கொள்ளை அழகு மகளிர் கையால் கொள்ளும் மதுவே சிறந்தது,
கள் மயக்கம் கட்டிலாமை கடவும் எதிர்ப்பே சிறந்தது,
மண்விண் இடையில் உள்ள எவையும் மதுப்போல சிறந்ததில்லையே.

புதிய ஆட்சிச் சிறப்பின், மேலாம் பழைய மதுவே சிறந்தது,
மதுவைத் தவிர மற்றவற்றின் வழியில் செலாமை சிறந்தது,
பதிற்றுப்பத்துத் தவிசின்மேலாம் கடைசி மதுவின் ஒருதுளி.
மதுக் குடத்தின் மூடி மன்னர் மணிப்பொன்முடியிற் சிறந்தது. 225

உனது வாழ்வின் தேவைக்கான உலகின் அரிய பொருள்எலாம்
உனது விருப்பம் போலக் கொள்ள உரிமம் பெற்றாய் ஆயினும்
உனதுழைப்பால் பெறாதவற்றை உரிமை கொள்ளல் பயனில்லை,
உனது வாழ்வின் நாள்கள் தம்மை மாற்றிக் கொள்ளேல் விழித்திரு.

குயவனிடத்தில் குடத்தை ஒன்று வாங்கினேன்நான் அக்குடம்,
"வியக்கும் வேந்தன் அவன்கை ஏந்தும் மதுவின் பொன்னின் கிண்ணமாய்ப்
பயன்பட்டிருந்தேன் இன்றோ எந்தக் குடியனுக்கும் பாண்டமாய்
இயங்குகின்றேன்" என்றனைத்துச் சேதிமுற்றும் சொன்னது.

நண்பனே, நான் உரைக்கும் உண்மை நல்ல முறையில் கேட்டிடு,
வெண்பொன் மேனி மகளிரோடு சிவந்த மதுவைக் கொண்டிரு,
மண்ணகத்தைப் படைத்தோனுக்கு நம் மீதில் ஏது அக்கறை?
உன்னை என்னை மீசை தாடி தனினும் உயர்வாய்க் கொண்டிலான்.

நம்பிக்கையின் கிளையில் கனிகள், தம்மைக் காண வேண்டிநான்
அங்கே என்றன் வாழ்க்கைக் கயிற்றின் அறுதி இருப்பது அறிகுவேன்
தன்னை மறந்த நிலையின் வாயில் தனைக்கண்டிருப்பின் போதுமே.
இன்னும் பலநாள் வாழ்வுக்கடலின் இடுக்கில் சிக்கி இருப்பதோ?

அன்பணங்கே, குடம் எடுத்து மதுவின் கிண்ணம் நிரப்பிடு,
இன்ப ஓடைக்கருகில் பசும்புல் வெளியில் என்னோடு அமர்ந்திடு,
ஒன்றுக்குதவாக் கொடிய காலச் சகடம் அன்பின் உளங்களைக்
கொன்றழித்து நூறு முறையும் குடங்கள் கலங்கள் ஆக்கிடும். 230

நான்கு பூதம் ஐம்புலன்கள் பற்றிப் பலகால் நவின்றும் என்?
தோன்றும் புதிர்கள் ஒன்றாய் நூறாய்க் கோடியாக இருப்பின் என்?
ஆன்ற நாமே வெறுந் துகள்கள்; அமிழ்த யாழை மீட்டிடு,
ஏன்ற வளிநாம் எலுவ சிறுவ, இனிய மதுவைக் கொண்டு வா!

எந்தப் பக்கம் நோக்கினாலும் இன்ப உலகின் ஆறுதான்
சிந்து பாடித் தோட்டம் பாயும், தென்படும் இப் புல்வெளி
அந்தத் துறக்கம் போலதாகும், அவற்றை இங்குப் புகழ்ந்திடேல்,
வந்து குந்து வான் அணங்கார் வனப்பு முகத்து மகளிர்பால்.

உன்றன் ஆர்வம் நேற்றைப் போதில் உனது நிறைவோடு ஒய்வுகொள்,
உன்றன் இச்சை அனைத்தும் நேற்றே உளத்தில் ஊன்றப் பட்டன.
எங்ஙனம் நான் உனக்குரைப்பேன்? உன்னை வினவி டாமலே
உன்றன் நாளை நேற்றைப் போதே முடிவு செய்யப் பட்டதே.

வாய்ப்புனக்கு வெள்ளை அப்பம், இரண்டு மிடா நிறைமது,
தோய்த்துத் தின்னத் தொடையின் கறியும் தோதாய் உனக்குத் தந்திடில்
வாய்த்த காவில் மலர்முகத்து மங்கையோடும் மகிழ்வையேல்
தோய்ந்திருக்கும் உன்னை விஞ்சி எந்த மன்னன் நுகருவான்?

விண்ணகத்தின் செயல்கள் யாவும் முறையாய் நிறுக்கப்பட்டிடின்
மண்ணகத்தில் அனைத்து நிலையும் ஏற்கும் வகையில் மாறிடும்,
அண்ணணித்துக் கோள்கள் நிலையில் அறம் இருக்குமாயிடில்
மண்ணில் மாந்தர் மனத்தின் நீர்மை மாறி நிற்றல் எப்படி? 235